விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர
14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 02 புதன்கிழமை (15.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

# சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுப்போம்

## எட் மிலிபான்ட் உறுதியளிப்பு



(லண்டன்)

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையானதும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்வதற்கு பிரித்தானிய தொழிற்கட்சி தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என அக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எட் மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.**

சித்திரைத் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு பிரித்தானிய வாழ் தமிழ் மக்களுக்கு காணொளி மூலம் வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவின் நாளாந்த வாழ்விலும், நாட்டுக்கும் பிரித்தானியா வாழ் இலங்கைத் தமிழ் மக்கள் வழங்கிய மதிப்பற்ற பங்களிப்புக்காக இந்த சந்தர்ப்பத்தில் தொழிற் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

அத்துடன், பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுடனான

24ஆம் பக்கம் பார்க்க

## தங்கம் கடத்திய இந்தியர்கள் கைது

(கொழும்பு)

சுமார் இரண்டு கோடி ரூபாயுக்கும் அதிக பெறுமதியுடைய தங்க ஆபரணங்களை தமிழகத்தின் மதுரைக்கு கடத்திச்செல்ல முற்பட்ட இரண்டு இந்திய பிரஜைகளை சுங்கப் பிரிவினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 4.2 கிலோகிராம் நிறையுள்ள முழுமையாக வடிவமைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்

24ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமத்திலுள்ள 30 கிணறுகளில் எண்ணெய் கலந்துள்ளமை உறுதி

### சுகாதார அமைச்சு பரிசோதனை அறிக்கை

(கொழும்பு)

இலங்கை சுகாதார அமைச்சினால் பரிசோதிக்கப்பட்ட 30 கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது

இலங்கை மத்திய அரசின் சுகாதார அமைச்சின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த மாதம் வலிகாமம் பகுதிகளில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள 30 கிணறுகளில் கழிவு எண்ணெய் மற்றும் கிறீஸ் என்பன குறித்து பரிசோதிக்கப்பட்ட செயன்முறைகள் எண்ணெய் கலந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளது.

இப்பரிசோதனைகள் அனைத்தும் இலங்கையிலேயே நம்பகத்தன்மையானதும் சட்டரீதியான அங்கீகாரம் உள்ளதுமான அரசாங்க பகுப்பாய்வு நிறுவனத்தில் நடத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான அறி

24ஆம் பக்கம் பார்க்க

## 605 சாரதிகள் போதையில் கைது

(கொழும்பு)

கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று 14ஆம் திகதி காலை 6 மணி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் 605 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் சாரதிகளே அதிகமாக கைது செய்யப்

24ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா பயணிக்க இலகு விசாமுறை

(கொழும்பு)

இந்தியாவிற்கு செல்ல விரும்பும் இலங்கை பயணிகள் விமான நிலையத்தில் வைத்தே இந்திய விசாவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை விஜயத்தின் போது விசா தொடர்பாக வழங்கிய உறுதிமொழிக்கு அமைய இந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தியா 43 நாடுகளுக்கு 'ஒன் அரைவல் விசா' அதாவது விமான நிலையத்தில் விசா பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை வழங்கி

24ஆம் பக்கம் பார்க்க



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்காலையில் உள்ள தனது கால்டன் இல்லத்தில், நேற்று புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்தார். இந்த நிகழ்வில் அவரது குடும்பத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கெடுத்தனர்.

## குற்றங்களுக்கு தண்டனை விதிப்பு; அமெரிக்கா-இலங்கை பேச்சு

(கொழும்பு)

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் குறித்து அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளா டொம் மாலினோவ்ஸ்கீ இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

அரசாங்க அதிகாரிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களை சந்தித்து இப்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் ஆகியன தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. பல்வேறு முக்கியமான விடயங்கள் குறித்து இந்த விஜயத்தின்போது பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (செ-11)

## ரணில்-மைத்திரி 17ஆம் திகதி பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை மறுதினம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் சந்தித்து பேசவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் பேச்சுவார்த்தை

24ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா விசாரணைக்கு இலங்கை முழு ஆதரவை வழங்க வேண்டும்

### பிரிட்டன் பிரதமர் கமரூன் வலியுறுத்து



(லண்டன்)

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்த ஐ.நா விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இத

24ஆம் பக்கம் பார்க்க

## கடும்மழை எதிர்பார்ப்பு

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டிற்கு பின்னர் அடுத்த வாரம் வரையில் நாடு முழுவதும் இடியுடன் கூடிய மழையை எதிர்பார்ப்பதாக கால நிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.


காலநிலை அவதான நிலையத்தின் கடமைநேர அதிகாரி லக்ஷ்மி லத்தீப் இதனை தெரிவித்தார்.

இந்த நிலையில், நேற்றும் நாட்டில் ஆங்காங்கே மழை பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுயாட்சி அதிகாரங்களை பெற தொடர்ந்தும் நாம் போராடுவோம்



## புதுவருடத்தில் சம்பந்தன் சபதம்

(கொழும்பு)

தமிழ் மக்கள், தமது சொந்த நிலத்தில் போதிய சுயாட்சி அதிகாரங்களைப் பெற்று சுதந்திரமாக, கௌரவமாக, நிரந்தரமாக வாழும் நிலை வரவேண்டும்.

அதுவரை நாம் தொடர்ந்து போராடுவோம் என்று மலர்கின்ற இந்த சித்திரைப் புதுவருடத்தில் சபதம் எடுத்துக் கொள்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப பின் தலைவர் இரா.சம்பந்தன் பா.உ.தெரிவித்தார்

புதுவருட வாழ்த்துச் செய்தியில் சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

2015-ம் ஆண்டின் ஆரம்பத்தில் நாம் ஆட்சி மாற்றத்தையும் அரசியல் தீர்வையும் எதிர்பார்த்தோம். நாம் எதிர்பார்த்த மாதிரி நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அனைவரையும் ஒன்றிணைத்து சமத்துவத்துடனும் சமாதானத்துடனும் நீதியைக் கட்டியெழுப்பக் கூடிய நல்ல சூழல் ஓரளவுக்கு வந்துள்ளது.

இதனை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நல்லாட்சி முழுமை பெற வேண்டும் என்றால் வாக்குறுதிகள் அனைத்தையும் அரசு நிறைவேற்றியே ஆக வேண்டும்.

சில வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்ற போதிலும் அரசியல் தீர்வு சம்பந்தமான வாக்குறுதிகளுக்கு கால அவகாசம் வேண்டும் என்பது உண்மை தான்.

அதற்காக தீர்வு சம்பந்தமான விடயத்தை கிடப்பில் போடுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களின் அபிலாஷைகள் நிறைவேறவில்லை.

அவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளினால் ஏமாற்றப்பட்டு வந்தார்கள். இந்நிலைமை இந்த ஆட்சியில் மாறவேண்டும்.

எதிர்வரும் வருடத்திற்குள் இந்நிலைமை மாறவேண்டும். மாறக்கூடிய சூழலும் இல்லாமல் இல்லை. இதனை அரசு புரிந்து கொண்டு செயற்படவேண்டும் என்றார். (செ-11)

# வட.கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு


(கிளிநொச்சி)

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கு உதவும் வகையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நலன்புரி சங்கத்தால் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி, தர்மபுரம் மகாவித்தியாலயம் ஆகிய இரு இடங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இவ் வழிகாட்டுக் கருத்தரங்கு துறைசார் வல்லுநர்களால் நடத்தப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு 077 2497160 மற்றும் 0777119380 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும். (ந)

# டைட்டானிக் நினைவுகள் 103 வருடங்கள் கடந்தன



(லண்டன்)

கண்ணீர் நினைவுகளை விட்டுச் சென்ற டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளாகி நேற்றுடன் 103 வருடங்கள் கடந்துள்ளன.

1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இரவு 11.40 மணிக்கு முழு உலகையும் கண்ணீரில் ஆழ்த்திய பேராபத்து இடம்பெற்றது.

பிரித்தானியாவின் தெற்கு ஹெமடன் நகரில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது டைட்டானிக் கப்பல்.

அதி சொகுசு கப்பலாக பெருமிதத்துடன் அட்லாண்டிக் சமுத்தி ரத்தில் கம்பீரமாகப் பயணித்தது.

இந்த கப்பலில் இருந்த பெரும்பாலானவர்கள் வட அமெரிக்காவிற்கு செல்பவர்களாகவே இருந்தனர்.

பயணத்தை நிறைவு செய்ய 4 நாட்களே எஞ்சியிருந்த நிலையில் டைட்டானிக் கப்பலின் பயணம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஐஸ் பாறையில் மோதி ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி நின்றது.

அதிகுளிர் காரணமாக சமுத்திரத்தில் மூழ்கி 1511 பேர் உயிரிழந்தனர்.

706 பயணிகளால் மாத்திரமே உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது.

இந்தக் கப்பலின் சிதைவுகள் 1985 ஆம் ஆண்டில் 12 ஆயிரத்து 415 அடி ஆழத்தில் இருந்து மீட்கப்பட்டது.

அந்த சிதைவுகள் இன்றும் உலகில் பல்வேறு காட்சியகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. (செ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைக் கோபுரம் சீனாவின் உளவு மையமா?

**இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தாமரைக் கோபுரம் சீன இலத்திரனியல் உளவு மையம் என இந்திய பாதுகாப்பு தந்திரோபாய ஆய்வாளர் ஹஸ்கர் ரோய் தெரிவித்துள்ளார்.**

சுற்றுலா மற்றும் தொடர்பாடல் மேம்படுத்தல் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் சீனா, இந்த உளவு மையத்தை உருவாக்கி வருகின்றது.

சீனாவின் இரண்டு பாதுகாப்பு நிறுவனங்களினால் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈபிள் கோபுரத்தை விடவும் 26 மீற்றர் உயரமுடைய தாமரைக் கோபுரமானது தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமாக உருவாக்கப்பட உள்ளது.

ஒரு புறத்தில் இந்தியாவையும் மறுபுறத்தில் இந்து சமுத்திரத்தையும் மையப்படுத்தி இந்த கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன எக்ஸிம் வங்கியின் நிதி உதவியுடன் இந்த கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என இந்திய பாதுகாப்பு தந்திரோபாய ஆலோசகர் ஹஸ்கர் ரோய் தெரிவித்துள்ளார்.

இந்த கோபுரம் நிர்மாணிக்கப்பட்டால் இந்தியாவினதும், தெற்காசியாவினதும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## தீர்த்தத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரம்மோற்சவ விஞ்ஞாபனத்தின் தீர்த்தத் திருவிழா இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் இடம்பெறும். (இ)


## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதனை அண்டிய பகுதியில் தனிவழியுடைய ஒரு அறை களஞ்சியமாக பாவிப்பதற்கு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:-
077 284 9686

(075)


## சு.கவிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கு ஜனசெத பெரமுன கட்சி அழைப்பு விடுப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஜன செத பெரமுன கட்சியின் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கட்சியின் தலைவராக பத்தரமுல்ல சீலரத்தின தேரர் இந்த அழைப்பை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இடமில்லையென்றபோதும் தமது கட்சியில் ஐந்து பேருக்கும் இடமிருப்பதாக தேரர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து பேரும் மீண்டும் மத்திய செயற்குழுவில் இணைந்துக் கொள்ளப்படலாம் என்ற ஊகங்களும் அவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்திகளும் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## க.பொ.த (சா/த) பெறுபேறுகள்-2015

**ஒஸ்மானியா கல்லூரி-யாழ்ப்பாணம்**

என்.சாலிகா-5ஏ2பி2சி, எச்.எவ். ஹயாசா பர்வின்-4ஏ4பிசி, ஆர்.எவ்.ஹன்சா-2ஏபி3சி3எஸ், எச்.எவ்.சகானி-2ஏ2பிசி3எஸ், என். மில்கான் பாரிஸ்-ஏபிசி4எஸ், எம்.எவ். ஹகீலா-2பி3சி3எஸ்.

## 180 ஆவது ஜெயந்தி விழா

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 180 ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக வில்லிசை நாடகங்கள் மற்றும் விசேட ஆன்மீக உரை என்பன இடம் பெறவுள்ளன. பிற்பகல் ஒரு மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (இ-3)

## சீபா உடன்படிக்கையினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து ஆராயப்பட வேண்டும்

சீபா உடன்படிக்கையினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் ஆராயப்பட வேண்டுமென தேசிய வர்த்தகசபை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சீபா என்னும் பொருளாதார உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இந்த உடன்படிக்கையினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து ஆராயப்பட வேண்டியது அவசியமானது.

வர்த்தகசபைகள், தனியார் துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி அதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

சீபா உடன்படிக்கை குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

2000 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினால் இலங்கை வர்த்தகர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நன்மைகள் மிகவும் வரையறுக்கப்பட்டவையாகும்.

எனவே சீபா உடன்படிக்கை தொடர்பில் மிகுந்த நிதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தேசிய வர்த்தக சபை அறிவித்துள்ளது. (இ-5)


## மரண அறிவித்தல்



**குமாரசாமி நடேசன்**

**(பிரபல வர்த்தகர் (குமாரசாமி அன்கோ கம்பளை அகில இலங்கை சமாதான நீதவான்)**

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் களபூமி விளானையில் வசித்தவருமாகிய குமாரசாமி நடேசன் (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பாக்கியம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் இராசபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சுந்தரமூர்த்தி மற்றும் தேவராணி (பூரணம் ), பத்மநாதன் (கம்பளை), சந்திரமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செந்தில்நாயகி, அம்பலவாணர், கனகரத்தினம், மகேஸ்வரன் மற்றும் ராகினி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பொன்னுத்துரை, சிவசுப்பிரமணியம், இரத்தினபூபதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தேவகுஞ்சரி மற்றும் அருணகிரிநாதர், இராசகுமாரி, கமலக்கண்ணன், சாந்தகுமாரி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் அஜந்தன், சிந்துஜா, தினேஸ் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் தவநாயகி, தவபாலன், சாந்தகுமாரி, சதானந்தன், விஜயாகீதாஞ்சலி, கஜன், வினோதினி, கஜானி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.04.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விளானை, களபூமி** **தகவல்:**
**காரைநகர். 0775884589** (சி-661) **மனைவி**


## இராசி பலன்

15.04.2015
(சித்திரை 02, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 10.19 மணிவரை
சதயம் முன்னிரவு 10.14 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்:** வருமானம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், எதிர்காலம் இனிமை யாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், கலகலப்பான நாள்.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** குடும்பத்தில் சிறுசிறு விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் சிந்தை மகிழ்வீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருள்தார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** செல்வ வளம் பெருக கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம்தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தெய்வ அனுகூலமுண்டு.

**மகரம்:** காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்குக் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, விருந்துகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**மீனம்:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 179**

## பயத்தை எதிர்கொள்ளல்

...உங்களுடைய தாய் தந்தையரை விட கடவுள் உங்களை நன்றாக அறிவார். அவர் உங்களை இந்தப் பிறவியில் மட்டுமல்லாமல், இதற்கு முன் பிறவிகளிலும் அறிவார். அதனால் அஞ்சுவதற்கு எதுவுமில்லை. அவர் முன் நீங்க் ஒரு திறந்த புத்தகமாக இருக்கிறீர்கள். அவரால் எப்பொழுது வேண்டுமானாலும் எந்தப் பக்கத்தையும் பார்க்க முடியும்!

அதனால் கடவுளைப் பற்றிய பயத்தை விட்டு விட்டு அவரை ஒரு பிரபஞ்ச இருப்புத் தன்மையின் முழுமையாகப் பாருங்கள். அவரை ஒரு நண்பனைப் போல் பாருங்கள்.

சமூகம் உங்களிடம் கடவுளைப் பற்றிய பயத்தை ஏற்படுத்த எவ்வளவு கடினமாக முயன்றாலும் அதற்கு செவி சாய்க்காதீர்கள். கடவுளிடம் உங்களுக்கான தனிப்பட்ட உறவை ஒரு உறுதியான விசுவாசிமிக்க உறவை- ஒருவரது வாழ்க்கையில் தேவையான ஒரே ஒரு உறவை- வளர்த்துக் கொள்ளுங்கள்.

பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் அல்லது கடவுளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள ஆரம்பித்தீர்களானால் நீங்கள் உங்களுடனேயே முன்பு இருந்ததை விட இன்னும் நன்றாக தொடர்பு கொள்ள ஆரம்பிப்பீர்கள்.



உங்களுக்குள் என்ன நிகழ்கிறது என்பதைச் சரியாகத் தெரிந்துகொள்வீர்கள். தெளிவு பிறக்கும். உங்கள் உள் அறிவுக்கூர்மை வளரும். பயங்கள் விலகிவிடும். எதையும் கண்டு பயப்படுவதற்கு முன் அதைச் சரியாகப் பார்க்கக் கற்றுக் கொள்வீர்கள். அறிவு, பயத்தை அகற்றி விடுவதால் நீங்கள் எதையும் செய்ய வேண்டிய எவ்வித நிர்ப்பந்தத்தையும் உணர மாட்டீர்கள். மிகவும் தளர்வாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள். விடுதலை பெற்றதாக உணர்வீர்கள்.

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மை பற்றிய இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் மதத்தின் பெயரால் நடக்கும் எல்லாச் சண்டைகளும் இனி இருக்காது. தங்கள் மதம் பற்றிய பயத்தில் இருப்பவர்களும் தங்கள் மதத்திற்காகச் சண்டையிடுபவர்களும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் அன்பைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளாதவர்கள். அவர்கள் தொடர்ந்து முழு விடயத்தைதயும் தவற விட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளும் குருடர்களைப் போன்றவர்கள்.

மிகவும் முக்கியமானது.... தயவு செய்து கடவுளைப் பற்றிய உங்கள் கருத்துக்களை உங்கள் குழந்தைகளிடம் திணித்து அவர்களிடம் கடவுளைப் பற்றிய பயத்தைப் புகுத்திவிடாதீர்கள். அவர்களுக்குக் கடவுளைத் தழுவிக்கொள்ளக் கற்றுக் கொடுங்கள். கடவுள் என்பது அனைத்தையும் உள்ளடக்கிய எங்கும் பரவியுள்ள பிரபஞ்ச இருப்புத் தன்மைதான் என்பதைக் கற்றுக் கொடுங்கள். கடவுள் என்பது தூய அன்பு தவிர வேறல்ல என்பதைக் கற்றுக் கொடுங்கள். *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### மரணமடைந்த 17 ஆண்டுகளுக்கு பின்பும் முகம் சிதையாமல் பாதுகாக்கப்படும் துறவியின் உடல்

சீனாவின் புத்த துறவியான வூ யுங்கிங், 17 வருடங்களுக்கு முன் மறைந்தபோதும் அவரது உடல் இன்றுவரை கண்ணாடி பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவரது முக உறுப்புகளும், முகத்தில் உள்ள தசைகளும், தலைமுடி மற்றும் தாடியும் இப்போதும் எவ்வித சேதமுமின்றி அப்படியே உள்ளது. அவர் தற்போது 102 வயதுடன் வாழ்ந்துக்கொண்டிருப்பதாக அவரது பக்தர்கள் நம்புகின்றனர்.

மத்திய சீனாவின் அன்யாங் நகரில் உள்ள லிங்குவான் புத்த விகாரையில், தவக்கோலத்தில் அமர்ந்த நிலையில் உள்ள துறவி யூ யுங்கிங் தங்க அங்கியும், மணிகளும் அணிந்துள்ளார்.

யுங்கிங்கிற்கு 15 வயதிருக்கும் போது அவரது பெற்றோர் மரணமடைந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. இதை தொடர்ந்து துறவியாக முடிவு செய்த யுங்கிங், ஷான்க்சி யனான் குயிங் ஹுவா விகாரைக்கு சென்றார்.



அங்கேயே இறுதி வரை இருந்த அவர், 1998 ஆம் ஆண்டில் மரணமடைந்தார். தங்களது குரு யுங்கிங்கின் உடலை பாதுகாக்க நினைத்த சீடர்கள், அவரது உடலை தாமரை நிலையில் வைத்து பெரிய பீங்கான் குவளையில் அடைத்தனர். பின்னர் அங்கிருந்து லிங்குவான் விகாரைக்கு கொண்டு வரப்பட்ட அவரது உடல், கண்ணாடி பேழையில் வைக்கப்பட்டது. ஏறத்தாழ 17 வருடங்களாக கண்ணாடி பேழைக்குள் இருக்கும யுங்கின் முகம், இன்றும் சிதையாமல் இருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் அங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

1990 ஆம் ஆண்டிலிருந்து புத்த துறவிகளின் உடலை மம்மிகளாக பாதுகாத்து வரும் சூகுவோ ஷெங் இதுபற்றி கூறுகையில், துறவிகளை மம்மிகளாக பதப்படுத்தி வைத்திருப்பதற்கு பெரிய பீங்கான் குவளைகள் பெரிதும் உதவுகின்றன என்றார். பீங்கான் குவளையில் வைக்கப்பட்ட உடலை பாதுகாக்கும் வகையில் தானியங்கள், மரத்துண்டுகள், நிலக்கரி மற்றும் சந்தனமரம் உள்ளே வைக்கப்படுவதாக கூறிய அவர், பீங்கான் குவளைக்குள் வைத்து மூடியபின், 3 வருடங்களுக்கு பின் அது திறக்கப்படும்போது உடல் அழுகாமல் இருந்தால், அந்த துறவியின் உடல் தங்க முலாம் பூசப்பட்டு சிலையாக மாற்றப்படும் என்று அவர் தெரிவித்தார்.

# சமைப்போம் சுவைப்போம்

## பாதாம் அல்வா

**தே.பொருட்கள்:**

பாதாம் பருப்பு - 1டம்ளர்
சர்க்கரை -11/2டம்ளர்
நெய் -11/2டம்ளர்
முந்திரிப் பருப்பு -1 டே.ஸ்பூன்
கேசரிப் பவுடர் -2 சிட்டிகை
பால் -1/4டம்ளர்
தண்ணீர் -1/4டம்ளர்
ஏலப்பொடி -1/4ஸ்பூன்



**செய்முறை:**

பாதாம் பருப்பை, ஒரு மணி நேரம் ஊறவைத்து, தோலை உரித்து எடுத்து விடவும். ஊறிய பருப்பை, மிக்ஸியில் நன்றாக மைய அரைக்கவும். அரைக்கும் பொழுது தண்ணீருக்குப் பதிலாக பாலை சேர்த்து அரைக்கவும்.

அரைத்த விழுதை மீதம் பால் இருந்தால் சேர்த்தோ அல்லது தண்ணீரை விட்டோ கூழ்போல் கரைத்துக் கொள்ளவும். சிறிதளவு நெய்யை வைத்து, முந்திரிப் பருப்பை ஒடித்து, வறுத்து எடுத்துக் கொள்ளவும். தண்ணீரில் சர்க்கரையைப் போட்டு நல்ல கம்பிப் பாகு நிலை வரும் வரைக்கும் கொதிக்க விடவும். கம்பிப் பதம் வந்தவுடன் அடுப்பைச் சிறியதாக வைத்து, அரைத்த கூழைக் கொட்டிக் கிளறிக் கொண்டேயிருக்கவும். அடுப்பில் கிளறிக் கொண்டிருக்கும் பொழுதே, மீதமுள்ள நெய்யை, கொஞ்சம் கொஞ்சமாக உருக்கி ஊற்றவும். கேசரிப் பவுடரைச் சேர்க்கவும். சிறிது நேரத்தில் உள்வாங்கிய நெய்யை அல்வா வெளியேற்றும் அல்லது கக்கும். அப்பொழுது ஏலப்பொடியையும் தூவிக் கிளறி நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்மத புதுவருட சிறப்பு மலர் 2015

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

தமிழ் மக்களுக்கும் இன்னுமொரு புத்தாண்டு. கடந்த மூன்று தசாப்த ங்களுக்கு மேல் வேதனைகளையும் சோதனைகளையும் சுமந்த இனமாக வாழும் எமது உடன்பிறப்புக்கள் இப் புத்தாண்டிலும் புத்தாண்டு பிறக்கின்றது என்று களிப்புறும் நிலையில் இல்லை. இந்த நாட்டில் நல்லாட்சி வேண்டும் என்ற கோபம் எழுந்த போது மனசுத்தியுடன் எமது இனம் அந்த நல்லாட்சி கிடைக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தது. அந்த நற்காரியத்தைச் செய்த உள்ளங்கள் இன்னும் எதிர்பார்ப்புகளுடன் துடிக்கின்ற ஒரு நிலையிலேயே இருக்கின்றனர்.

நல்லாட்சியின் பயன் எமக்கு எப்போது கிடைக்கும்? அல்லது இன்னும் ஒரு தேர்தல் வரப்போகின்றது, அதற்கும் நாங்கள் பலிக்கடாக்களாகத்தான் போகின்றோமா என்ற ஆதங்கத்தில் இதயத்துடிப்புடன் எமது உடன் பிறப்புக்கள் தவிக்கின்றன.

தங்களின் சொந்தக் காணிகளில் தாங்கள் குடியேறுவோம் என்ற அவர்களின் எதிர்பார்ப்புப் பெரும்பாலானவர்களுக்குக் கானல் நீராகவே தோன்றுகின்றது. காணா மற்போன மற்றும் இராணுவ ஆட்சியால் "கைதுசெய்யப்பட்ட" உடன் பிறப்புகள் இருக் கிறார்களா? சிறைகளில் வாடுபவர்கள் விடுவிக்கப்படுவார்களா? அல்லது நீதிதேவதையின் முன்னாவது நிறுத்தப்படுவார்களா? என ஏங்கித்தவிக்கும் உள்ளங்கள் கணக்கிலடங்கா. வாழ்வாதார உதவியின்றிக் கலங்கும் விதவைகள், தாய்மார்கள், நோயாளிகள் ஆகியோருக்கும் எப்போது நிவாரணம் கிடைக்கும்? இப்படிப் பலபல கேள்விகளுடன் தான் எமது சகோதர சகோதரிகள் தொடர்ந்தும் வாழ வேண்டுமா?

எமது மக்களுக்கு மேலும் தாமதியாது விடிவு கிடைக்க இறையருள் வேண்டி நாங்கள் எல்லோரும் இப் புத்தாண்டில் வழிபடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தவித்துக் கொண்டிருக்கும் எமது உடன் பிறப்புக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்யவும் கடமைப்பட்டி ருக்கிறோம்.

எமது மதத்தைச் சேர்ந்த எமது உடன் பிறப்புக்கள் எல்லோரும் - இந் நாட்டில் வாழ்பவர்களும், வெளிநாடுகளில் வாழும் சகோதர சகோதரிகளும் சேர்ந்து இப் புத்தாண்டில் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

*இறைபணியில், கந்தையா நீலகண்டன், தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

## பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கட்டும்



ஜயவருடம் அகன்று மன்மத வருடம் ஜனனமாகியுள்ளது.மன்மத என்பது அழகைக் குறிக்கும் பொருள்படக் கொள்ளலாம். அழகான ஒருவரைப்பார்த்து மன்மதன் எனச்சொல்வார்கள். எது எப்படியோ ஜயவருடத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி, அமைதி, சாந்தி மன்மத வருடத்திலும் நிலைத்து தொடர்ந்து கொண்டிருக்கவேண்டும்.

இஷ்டகுல தெய்வங்களை வணங்கி புத்தரிசி கொண்டு ஆலயத்திலும் மனைகளிலும் பொங்கலிட்டு தாய்,தந்தை, குருபெரியோரின் ஆசிக ளைப் பெற்றும் பஞ்சாங்கப் பலன்கேட்டு பட்சனங்கள் கொடுத்துப் பரிமாறியும் குறிப்பாக ஏழைகள்,அநாதைகள் முதலான வர்களுக்கு உதவிகள் புரிந்தும் அவர்களின் மகிழ்ச்சியில் இறைவனைக் கண்டும் பேரானந்தப்பெருவாழ்வு வாழ்ந்திடவேண்டுமென்று கலட்டியம்பதியான் வீரகத்தி விநாயகரை வேண்டி நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவாச்சார்ய திலகம், கணேசஉபாசகர், சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்,**
**ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்**

## லொறி மோதியதில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பதியதலாவ - கடுபஹர கெஹெல்உல்ல பிரதேசத்தில் லொறி மோதி இருவர் உயி ரிழந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து ஒரு குழுவைச் சேர்ந்த மூவர் மற்றைய குழுவின் மூவரை லொறியில் மோதி இருவரை கொலை செய்துள்ளனர்.

28 மற்றும் 29 வயது நபர்களே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

காயமடைந்த நபர் மஹியங்கனை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அடிமைத்தனம் நீக்கப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

புதிய வசந்தம் ஒன்று மலர வேண்டு மானால் தேவையற்ற கட்டுப்பாடுகள் தளர்த் தப்பட வேண்டும். எம்மீது திணிக்கப்ப ட்டிருக்கும் அடிமைத்தளை நீக்கப்பட வேண் டும். நாமாக நாம் மலர நாமகள் நமக்கருள் புரிய வேண்டும். எனவே இந்த புத்தா ண்டிலே மத்தி எம்மீது திணித்திருக்கும் அரச ரீதியான, நிர்வாக ரீதியான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்று பிரார்த் திப்போம் என வடக்கு மாகாண முதலமை ச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரித்தார். நேற்று முன்தி னம் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மலரட்டும் புதுவசந்தம் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எம்மைச் சுற்றி இராணுவச் சூழலைத் தொடர்ந்து வைத்திருந்து எம்மைச் சுதந்திரம் அற்ற ஒரு மனிதக் கூட்டமாகச் செயற்பட வைத்துக் கொண்டு வருவதை இனியாவது நீக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம். எங்கள் பாரம்பரியம், எங்கள் மொழி, எங்கள் பொருளாதார விருத்திகள் யாவும் தாமாக எம்மிடையே இனி மலர இறைவன் வழிவிட வேண்டும் என்று கோரிப் பிரார்த்திப்போம்.

இந்தப் பிரார்த்தனையின் போது இந்திய அரசின் அலகும் சேர்ந்து தோளோடு தோள் நின்று எமக்கு உறுதுணையாக நிற்பது பாரதம் எமது மலர்ச்சிக்கு வித்திடும் என்ற நற்செய்தியை வெளிக்கொண்டு வருவதாக நிற்கின்றது.

இன்றைய இந்த விழாவில் பல கல்லூ ரிகள் பங்குபற்றுகின்றன. பல மகளிர் கல் லூரிகள் எங்கள் பாரம்பரிய நடனங்களை எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக! பண்டைய தமிழ் நூல்களிலே நடன வகை களைக் கூத்து என்றே குறிப்பிட்டார்கள். அதனால்தான் நடராஜரைப் கூத்தபிரான், கூத்த ஆண்டவன், கூத்தரசன் என்றெல்லாம் அழைத்தார்கள்.

கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற் றாண்டளவில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்த கூத்து வடிவங்கள் பற்றி இளங்கோ அடிக ளார் குறிப்பிட்டுள்ளார்.

ஆதிகாலத்தில் நடனத்திற்கும் நாடகத்திற் கும் இடையே பாரிய இடைவெளியிருக்கவி ல்லை. நாடகத்தினுள் நடனத்தை உபயோ கித்தார்கள். நடனத்தினுள் நாடகத்தை உட் புகுத்தினார்கள். காலம் செல்லச் செல்லத் தான் நடனமும் நாடகமும் வெவ்வேறாக வளர்ந்தன. இயல், இசை, நாடகம் என்று தமிழர்கள் தங்கள் கலைகளைப் பிரித்ததில் நாடகம் என்ற சொல்லினுள்ளேயே நடன மும் சங்கமித்திருந்தது. தெருக்கூத்து என்ற ஆதிகால கிராமிய கலை வடிவத்தில் இருந்து தான் இயல், இசை, நாடகம் பரிணமித் திருந்தன.

நடனம் என்பது ஒரு சங்கேத மொழி. வெளியில் காண்பதை நடப்பதை சில குறியீடு களினூடாக எடுத்தியம்புவதே நடனம். ஒரு நல்ல நர்த்தகி தான் சுட்டும் அந்த நிகழ்வை, செய்தியை, கருத்தை மிகத் தத்ரூபமாக எடு த்துக்காட்டக் கூடிய சிறப்பைப் பெற்றிருப்பாள். ஆனால் அவர்களின் சங்கேத மொழிகளை நாங்கள் புரியக்கூடியதாய் எமக்கு அந்த அறிவு இருக்க வேண்டும்.

ஆகவே நடனங்கள் நடைபெற முன் அந் தந்த நடனங்களின் சில சிறப்பு அம்சங்க ளையும் அதில் வெளியிடப்படும் குறியீட்டு மொழி பற்றியும் பார்வையாளர்களுக்கு அறிவை முன்கூட்டியே தந்து வைத்தால்நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன். நடனங்கள் எமது பார்வைக்கு வெறுமனே கைகால் ஆட்டும் ஒரு நிகழ்வாக மட்டும் அமையாது. அவற்றைப் பற்றிய உள்ளறிவையும் உயர் ந்த கருத்துக்களையும் எடுத்தியம்பி எம்மை அவை சம்பந்தமாக அறிவுடையாளர்கள் ஆக்குவது இந்த நடன முறைகள் பல கால த்திற்கு அழியாதிருக்க உதவி புரியும்.

கலைகள் சம்பந்தமான நிகழ்ச்சிகளில் எமது இந்தியத் துணைத் தூதரகம் காலம் காலமாகக் கரிசனை காட்டி வருவதை நாம் யாவரும் அறிவோம். அதே போல் கலாசார மண்டபம் ஒன்றை எமக்குத் தந்துதவ இந்தியா முன்வந்து அது தற்போது கட்டப் பட்டுக் கொண்டு இருக்கின்றது.

வருங்காலத்தில் எமது கலைகளின் வெளிப்பாடு ஒரு நவீன கலாசார மண்ட பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம் என மேலும் தெரிவித் தார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 22 சூரிசெவ் 2 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA,MBA UK<br>தொ.இ: B/508 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 29 1/2 செவ் 4 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: GAQ<br>தொ.இ: G/923 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் பூரம்<br>கி.பா: 28 சூரிசெவ் 10 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/510 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 79 செவ் 8 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDM/ தனியார் தொழில்<br>தொ.இ: G/926 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 15 செவ் 8 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L லண்டன் PR<br>தொ.இ: B/515 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 38 செவ் 2 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் B.COM/ அரச தொழில்<br>தொ.இ: G/934 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25 செவ் 2 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC,MSC லண்டன்<br>தொ.இ: B/519 | பிறப்பு: 1973 NONRC<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/936 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய அறிவு, நாவன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்ற சமய அறிவு, நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களோடு, 5 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

வரணியூர் சிவராஜா தலைமையில் "வளர்ந்து வரும் நவீனத்தால் இளைய தலைமுறை தடம் பிறழ்கின்றது,இல்லை தடம் பதிக்கின்றது" என்னும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வெற்றியாளர்களின் விபரங்கள் ஆலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் வெற்றியாளர்கள் உரிய நேரத்தில் கலந்துகொள்ளுமாறு போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

(இ-3-23)



# யாழ்ப்பாணத்தில் 90 வீதமான உணவகங்கள் உணவகம் ஒன்றிற்கு ஏற்ற வகையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

**யாழில் உள்ள உணவகங்களில் 90 வீதமான உணவகங்கள் உணவகம் ஒன்றுக்கு ஏற்றவகையில் அமைக்கப்படவில்லை என யாழ்.மாநகர சபையின் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இவ் உணவகங்களில் கழிவகற்றும் பாதை, உணவுப் பொருட்கள் வைக்கும் இடம், சமையலறை, களஞ்சியம் என்பன சீரான முறையில் காணப்படவில்லை அல்லது அமைக்கப்படாமையே இதற்குக் காரணம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உணவு சம்பந்தமான தொற்றும், தொற்றா நோய்கள் 35 சதவிகிதம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இது நாடளாவிய ரீதியில் அதிகரித்த தொகை எனவும் இதற்குக் காரணம் இங்கு காணப்படுகின்ற உணவுப் பழக்கங்களில் காணப்படுகின்ற சுகாதாரமற்ற நிலையே என யாழ். மருத்துவர் சங்கம் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பின்போது சுட்டிக் காட்டியிருந்தது.

இது தொடர்பில் யாழ். மாநகர சபையின் வைத்திய அதிகாரிகளிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

எமது உணவுப் பழக்கவழக்கங்களில் சுகாதாரமற்ற நிலை காணப்படுவது உண்மையே. குறிப்பாக இது இங்குள்ள உணவகங்களில் மிக அதிகமாகவே காணப்படுகின்றது.

யாழ். நகரிலுள்ள மருத்துவ அதிகாரி 9 பிரிவுகளில் உள்ள உணவகங்களிலும் இதே நிலை தான் காணப்படுகின்றது.

தண்ணீர் கொண்டுவரும் நிலை, சாப்பாடு பரிமாறும் நிலை போன்ற சிறு விடயங்களில்கூட சுகாதாரம் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

குறிப்பாக இவ்வுணவகங்கள் யாவும் உணவகங்களாகவே இயங்க முடியாது. ஏனெனில் இவை உணவகங்களுக்கு ஏற்ற வகையிலான கட்டட அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.உணவு கொண்டு செல்லவும் கழிவகற்றவும் ஒரே வழியினைத் தான் பயன்படுத்துகின்றனர்.

கடைக்கு வருபவர்கள் சாப்பிட்டு கொண்டிருக்கும் போது கழிவுத் தொட்டி நிறைவுற்றதும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே அதனூடாக கழிவை எடுத்து செல்கின்றனர். இவ்வாறு பெரும்பாலான உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடனேயே காணப்படுகின்றது.

இச்சுகாதாரமற்ற நிலையினை முழுமையாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களே பொறுப்பேற்க வேண்டும். இதனைப் பொதுமக்களும் தாமாக தட்டிக்கேட்க முன்வர வேண்டும். உணவை வெறுங்கையால் எடுத்துத் தருவது சுத்தமற்ற குடிநீர் போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் இனி வருங்காலங்களில் ஒவ்வொரு கிழமைகளிலும் யாழில் உள்ள உணவகங்கள் பரிசோதனையிடப்படுவதோடு வருடாவருடம் அனுமதிப்பத்திரம் கட்டாயமாக புதுப்பிக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-4)




## விருந்தாளி மாதஇதழ் அறிமுக விழா நாளை

காரைநகர் களபூமி கலையகத்தின் அனுசரணையுடன் கலை இலக்கிய அறிவியல் நட்புறவாளர் வட்டத்தின் "விருந்தாளி" மாத இதழ் அறிமுக விழாவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொன். சிவானந்தராஜா அதிபர் சேவை தரம் ஒன்றிக்கு பதவி உயர்வு பெற்றமைக்கான பாராட்டு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் களபூமி கலையகத்தில் விருந்தாளி முகாமைத்துவ ஆசிரியர் தலைவர் காரை எஸ். கங்கா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை டாக்டர் கு.அம்பிகை பாகனும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, காரைநகர் களபூமி அம்பாள் வைத்திய சாலையின் டாக்டர் செல்வி ஆறுமுகம் நகுலேஸ்வரியும் மற்றும் சுந்தரமூர்த்தி வித்தியாலய உப அதிபர் திருமதி க.லிங்கேஸ்வரனும் மூத்த ஊடகவியலாளர் ந.கணேசமூர்த்தியும் ஓய்வு பெற்ற அதிபர் க.தில்லையம்பலமும் மற்றும் சித்தாந்த வித்தகர் வே. நடராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## எமதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் சூழல் ஏற்படட்டும்

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய சூழலை ஏற்படுத்தக் கூடியதாக புத்தாண்டு அமையவேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்தையொட்டி அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

எமது மக்களின் தேவைகள் பலவற்றில் கணிசமானவை தீர்க்கப்பட்டுள்ளன.

எனினும் இன்னும் தீர்க்கப்பட வேண்டியவிடயங்கள் எஞ்சியுள்ளன.

எமது மக்களின் உணர்வுகளுடன் ஒன்றிணைந்த விடயங்கள் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களாக மீதமுள்ளன. அவ்வாறான தேவைகள் குறித்து அதிக அக்கறைகொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றக்கூடிய வகையிலான சூழலை மலர்ந்துள்ள புதுவருடம் உருவாக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அந்தவகையில் தமிழ் - சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடிய அனைவரும் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்று, அனைத்து உரிமைகளுடனும் வாழ எனது இதயபூர்மான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் என செயலாளர் நாயகம் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளி மழலைகளின் கண்காட்சி அண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தின் போது நடத்தப்பட்ட சொற்பொழிவின் வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அறிவொளி கலையரங்கத்தில் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது . இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மங்கல விளக் கேற்றுவதனையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)



மாணவர் உறவுச் சங்கமம் எனும் கருப்பொருளில் யாழ்.பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவருக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் லியோ கழக அங்கத்தவர்கள் மற்றும் பொறுப்பாசிரியர் ஆகியோரால் சேகரிக்கப்பட்ட கற்றல், அன்பளிப்பு பொருட்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டபோது....



இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)



செயற்றிறன் அரங்க இயக்கமும் யாழ்.மாநகரசபையும் இணைந்து நடத்திய தனிநடிப்பு இறுதிப்போட்டி அண்மையில் செயற்றிறன் அரங்கத்தில் நடைபெற்றபோது.... (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)






யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் வரவேற் கப்படுவதையும் வெற் றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும்வழங்கப்படுவதையு ம் படங்களில்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்து வெட்டுவான், ஐயங்கன்குளம் ஊடான போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படவில்லை

(மல்லாவி)

**துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட துணுக்காயிலிருந்து புத்துவெட்டுவான்,ஐயங்கன்குளம் ஊடாக யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு செல்லும் வவுனியா பயணிகள் போக்குவரத்து சேவையானது மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்தும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் நடை பயணமாகவும் மாட்டு வண்டில்களி லும் ஏ-9 வீதியை சென்றடைந்து பயணத்தை தொடர்வதாக பாதிக்க ப்பட்ட மேற்படி கிராமங்களுக்கான மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட புத்துவெட்டுவான்,ஐயங்கன்குளம், தேறாங்கண்டல்,பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வைத்திய சாலை, பொதுச்சந்தை மற்றும் ஏனைய தேவைகளுக்காக வெளியிடங்களுக்கு செல்வதற்கு அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் இன்றி அல்லல்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் சிற்றூர்திசேவையொன்று (மினிபஸ்) துணுக்காயிலிருந்து புத்துவெட்டுவான்,ஐயங்கன்குளம்,கொக்காவில் ஊடாக கிளிநொச்சி வரை தினமும் காலை, மாலை என இரு சேவைகளை நடத்தி வந்தது.

இச்சேவை நாளடைவில் இடைநிறுத்தப்பட்டு அச்சிற்றூர்தியின் உரிமையாளர் ஆடை தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

மேற்படி போக்குவரத்து சேவையின் சீர்கேடு தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலக மாதாந்த ஒன்றுகூடலின் போதும் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் அபிவிருத்திக்குழு கூட்டங்களின் போதும் பல தடவைகள் கிராம சேவையாளர்கள், கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோரினால் சுட்டிக்காட்டப்பட்டும் எதுவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தகாலத்திற்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களின் சாலைகளுக்கான பேருந்துக்கள் தினமும் இரவு,பகல் ஆகிய வேளைகளிலும் பல தடவைகள் சேவையிலீடுபட்டிருந்தன.

தற்போது இ.போ.ச.பேருந்து சபையின் முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான சாலைகளுக்கு 80இற்கும் மேற்பட்ட பேருந்துக்கள் அண்மையில் வழங்கப்பட்ட நிலையில் மேற்படி கிராமங்களுக்கான போக்குவரத்து சேவையில் அவை ஈடுபடாமல் ஏ-9வீதியில் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையிலான போக்குவரத்தில் வருமானத்தை இலக்கு வைத்து ஈடுபடுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மலர்ந்துள்ள புத்தாண்டில் பயணிகள் பேருந்து சேவையொன்றை ஏற்படுத்தி தரவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் மக்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-15)







துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே வலயமட்ட மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போது....

(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

## கமக்கார அமைப்புக்களின் கணக்குகள் நீண்டகாலமாக சீர்செய்யப்படவில்லை

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமக்கார அமைப்புக்களின் கணக்கு விபரங்கள் நீண்டகாலமாக சீர்செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் இதன்மூலம் பயனடையும் விவசாயிகள் தமக்கான நன்மைகளைப் பெறமுடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாகும்.

இந்நிலையில் விவசாயிகளுக்கு உதவ வேண்டிய கமநலசேவை திணைக்களம், சிறந்த முறையில் தமது சேவைகளை செயற்படுத்தாமையானது வேதனைக்குரிய ஒன்றாகும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சில கமக்கார அமைப்புக்களின் கணக்கு விபரங்கள் நீண்டகாலமாக சீர்செய்யப்படாத நிலை காணப்படுவதால் இதன்மூலம் பயனடையும் விவசாயிகள் தமக்கான நன்மைகளை பெறமுடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிளிநொச்சி கணேசபுரம் கமக்கார அமைப்பினது கணக்குகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுவதாகவும்இதனை சீர்ப்படுத்தும் ஒழுங்குகள் நடைபெறுவதாகவும் தெரிவித்த போதிலும் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

புதுமுறிப்பு குளத்தின் கீழ் மூன்று கமக்கார அமைப்புக்கள் ஒன்றாக இயங்கிய நிலையில் தற்போது அவை மூன்று பிரிவுகளாக தனித்தனியாக இயங்க ஆரம்பித்துள்ளன. ஒன்றாக இருந்த கணக்குகள் பிரிந்து சென்றுள்ள கமக்கார அமைப்புக்களுக்கு பங்கீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேற்படி கமக்கார அமைப்பினர் கணக்கு விபரம் தொடர்பில் கவனயீனமாகச் செயற்படுவதாகவும் இப்பணத்தைக் கொண்டு கழிவு வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து விவசாயத்தையே தொழிலாக கருதும் மக்களுக்கு உதவவேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது.(2-15)

## மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்க உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன



(கிளிநொச்சி )

கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் ம.மதிதாஸால் கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி. கிளிநொச்சி பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் போரால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களினதும் விசேட தேவையுடைய மாணவர்களினதும் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஒரு இலட்சத்து 35 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி. காலணி. புத்தகப்பை. உதவித்தொகை என்பன 60 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பளை மத்திய கல்லூரி அதிபர் சி.பாலகிருஷ்ணனும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கு உதவிப் பொருட்களினை வழங்கியும் வைத்தனர். (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மத்திய பேருந்து தரிப்பிடம் விரைவில் அமைக்கப்படும்

## உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் உறுதிமொழி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய மத்திய பேருந்து தரிப்பிட நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்படும். அத்தோடு வவுனியா தொடக்கம் கே.கே. எஸ். வரையான புகையிரதப் பாதையின் பாதுகாப்புக் கடவைகள் அமைப்பதற்கான சகல வசதிகளையும் நிச்சயம் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வேன் என உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் ஆர்.எம்.றஞ்சித் மத்தும பண்டார உறுதியளித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட மத்திய பேருந்து நிலையம் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றது. அதன் திறப்புவிழா முடிந்ததன் பின்னர் விரைவில் முல்லை மாவட்டத்துக்கு விஜயம் செய்து, புதிய மத்திய பேருந்து தரிப்பிட நிலையத்துக்கான அடிக்கல் நாட்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்படும்.

அதனைத் தொடர்ந்து கட்டட வேலைகள் துரித கதியில் நடைபெறுவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளையும் தான் மேற்கொள்வதாகவும் வவுனியா தொடக்கம் கே.கே.எஸ் வரையான புகையிரதப் பாதையின் பாதுகாப்புக் கடவைகள் அமைப்பதறகான சகல வசதிகளையும் தான் நிச்சயமாக பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் எனவும் உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் ஆர்.எம். றஞ்சித் மத்தும பண்டார, உறுதியளித்துள்ளார்.

உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் ஆர்.எம்.றஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் பேரவை உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்தவாரம், கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் மேற்படி கூறியுள்ளாார்.

முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயகாந்தினால் முல்லைத்தீவு மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள், முல்லை மாவட்ட மக்களுக்கு இதுவரை மத்திய பேருந்து தரிப்பு நிலையம் அமைக்கப்படவில்லை ஆகிய பிரச்சினைகளை அமைச்சரின் கவனத்துக்கு எடுத்துக் கூறப்பட்டதுடன், வவுனியா தொடக்கம் கே.கே.எஸ் வரையான புகையிரதப் பாதையில் பாதுகாப்புக் கடவை அற்ற நிலைமை காரணமாக கடந்த பல மாதங்களாக பாடசாலை மாணவர், முதியோர் உள்ளடங்கலாக பலர் புகையிரத விபத்துக்களால் உயிர் இழந்து வருகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், வவுனியா மாவட்ட மத்திய பேருந்து நிலையம் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றது. அதன் திறப்புவிழா முடிந்ததன் பின்னர் விரைவில் முல்லை மாவட்டத்துக்கு விஜயம் செய்து, முல்லை மாவட்டத்துக்குப் புதிய மத்திய பேருந்துதரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்ட சகல ஏற்பாடுகளும் செய்வதுடன் அதனைத் தொடர்ந்து கட்டட வேலைகள் துரித கதியில் நடைபெறுவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வேன்.

வவுனியா தொடக்கம் கே.கே.எஸ் வரையான புகையிரதப் பாதையின் பாதுகாப்புக கடவை அமைப்பதற்கான சகல வசதிகளையும் தான் நிச்சயமாக பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வேன் என உறுதி மொழி அளித்தார்.

இச்சந்திப்பில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆர்.எம்.றஞ்சித் மத்தும பண்டார, அமைச்சின் செயலாளர், இணைப்புச் செயலாளர், முற்போக்கு தமிழ் தேசிய கட்சி சார்பாக செயலாளர் நாயகம் எஸ்.விஜயகாந்த், முல்லை மாவட்ட அமைப்பாளர் க.டக்ளஸ், யாழ். மாவட்ட அமைப்பாளர் ஜே.ராஜ்குமார், கிளிநொச்சி - முல்லைத்தீவு இளைஞர் பேரவை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2)

# லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை ஆலய இலங்கைக்கான அலுவலகம் திறப்பு

லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினால் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் சமூக நலப் பணிகளுக்காக இலங்கைக்கான அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள அகில இலங்கை சைவமகா சபையின் வன்னிப் பிராந்திய தலைமைப்பீட வளாகத்தில் இப்புதிய அலுவலகம் அமையப் பெற்றுள்ளது.


லண்டனிலிருந்து வருகை தந்த ஈலிங் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா ச.அபயலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செல்வச்சந்நிதி ஆச்சிரம சுவாமிகள், சைவ மகா சபை தலைவர் சி.சோதிமூர்த்தி, யாழ்.கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்மாவட்டங்களின் இணைப்பாளர்கள், அறநெறி ஆசிரியர்கள், கல்வி நிலைய மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் இந்து கலாசார திணைக்களமும் சைவமகா சபையும் இணைந்து நடத்திய வன்னிப் பிராந்திய அறநெறி ஆசிரியர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 58 ஆசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருக்குறள், சமய, அறிவுப்போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

தினமும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரையான நேரத்தில் கல்வி, வாழ்வாதார விசேட தேவைப்பாடு உடையோர் இந்த அலுவலகத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு தங்களுடைய பிரச்சினைகள் அவசியத் தேவை கள் தொடர்பான விபரங்களைக் கையளிக்க முடியும்.

நேரடியாக வரமுடியாதவர்கள் 077774 0958 என்ற தொலைபேசி இலக்கத் திலோ ealingammancentre@gmail.com என்ற மின்னஞ்சலிலோ தொடர்பு கொள்ள முடியும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்கு மலையகக் கிராமங்களிலுள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு கைகொடுப்பதனூடாக வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சைவமகா சபை அப்பியாசக் கொப்பிகளை விநியோகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ




## மன்னார் பிரதான பாலத்தின் தெருவிளக்கு ஒளிர்வதில்லை பயணிகள் குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகள் ஒளிராமை யால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

தலைமன்னாருக்கான பாலம் புதுப்பிக்கப்பட்டு தற்போது போக்குவரத்து நடைபெற்றுவருகிறது. எனினும் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் சீராக ஒளிர்வதில்லை. இதனால் வாகனங்களில் பயணிப்போரும் பாலத்தில் பொழுது போக்கிற்காக வருபவர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இப் பாலத்தில் இருள் சூழ்ந்துள்ளமையால் விபத்துக்களும் இடம்பெறுகின்றன. எனவே பாலத்தின் தெருவிளக்குகளை திருத்தி தரும்படி பலமுறை மன்னார் நகரசபையின் கவனத்திற்கு மக்கள் கொண்டு சென்ற போதிலும் இது தொடர்பாக அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றஞ சாட்டுகின்றனர.

2464 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மன்னார் பிரதான பாலம் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட பின் மன்னார் நகரசபை அதனை பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# விவசாயக்குள புனரமைப்பு, வேலைத்திட்டங்கள்; எமது கிராமத்தின் பின்னடைவை மாற்றியமைக்கும்

## பழம்பாசி கிராம மக்கள் தெரிவிப்பு

எங்கள் கிராமத்திற்கு வரவிருக்கும் தார் பாதையும் விவசாய முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் அயல்கிராம பண்டார குளப்புனரமைப்பு வேலைத்திட்டங்களும் இனி எமது கிராமம் பின்தங்கியவை என்ற அடையாளத்தை மாற்றும் என்று பழம்பாசி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், லிங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்ட மேற்படி கிராம மக்களுடனான சந்திப்பொன்றிலேயே மக்கள் பிரதிநிதிகள் கடந்த 12 ஆம் திகதி மேற்படி கருத்துக்களை முன்வைத்ததோடு கிராமத்தில் காணப்படும் பல்வேறு குறைகள் தொடர்பிலும் கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்திருந்தனர்.

இதன்போது கருத்துக்களை முன்வைத்த கமக்கார அமைப்பினர் பழம்பாசி கிராமத்துக்குட்பட்ட இருகுளங்களை ஆழப்படுத்துவது தொடர்பிலும் மேய்ச்சல் தரை ஒதுக்கீடு தொடர்பிலும்பாடசாலை விளையாட்டு மைதானம் மற்றும கவனிக்கவேண்டிய ஏனைய முக்கிய வீதிகள் மின்சார இணைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள தொடர்பிலும் தமது கோரிக்கை களை முன் வைத்திருந்தனர். இச்சந்திப்பில் கருத்து தெரிவித்த வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன்,

இந்நிலையில் அலைகல்லு போட்ட குளத்தை அன்று பார்வையிட்ட பின்னர் பல ஏக்கர் வயல்நிலங்களும் விவசாயிகளும் பயன பெறுவர் என்ற விபரங்கள் உரிய அமைச்சுகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதே போன்றே மாமடு பழம்பாசி வீதியை யும் இக்கிராமமக்களின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த வருடம் அன்று பார்வையிட்டு அவை தொடர்பில் மாகாண சபையில் கதை த்து உரிய நிதி ஒதுக்கீட்டை ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

கிராமங்களில் உள்ள அமைப்புகள் ஒவ்வொன்றும் வினைத்திறனாக செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையும் அக்கிராமத்தின் கட்டமைப்புகளை இன்னும் வலுப்படுத்தும். தொடர்ந்தும் கிராமங்கள் சார்ந்த கோரிக்கைகளையும் திட்டங்களையும் எங்களிடம் முன்வையுங்கள். எல்லோரும் இணைந்து செயற்படுவதாலே கிராமத்தின், தேசத்தின் வளர்ச்சியை உறுதிசெய்யும் என்றார். (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாகப்பிரிவினை

வஜ்ரபுரியிலிருந்த ஜெயராமன் பெரிய செல்வர். இளமையில் வறுமையில் உழன்ற அவர் தனது கடும் உழைப்பினாலும், திறமையினாலும் வியாபாரத்தில் பல இலட்சங்களைக் குவித்தார்.

ஆனால் சிறு வயதில் தான் ஏழ்மையினால் உண்ண உணவின்றி அடைந்த



துன்பங்களை அவர் மறக்கவில்லை. அதனால் பசியுடன் யார் அவர் வீட்டை நாடி வந்தாலும் வயிராற உணவளித்தார். அதனால் அவர் வீடு ஒரு தர்ம சத்திரம் போல் திகழ்ந்தது.

அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். ரகுபதி, ராகவன், ராஜாராமன் என்ற அவருடைய பிள்ளைகள், தனித் தனியாக தந்தையின் கீழ் வியாபாரத்தில் ஈடுபட்டு அவருக்கு செல்வம் தேடித் தந்தனர்.

வயதாக, வயதாக, ஜெயராமனுக்கு வியாபாரத்தை விட்டு ஓய்வெடுக்கத் தோன்றியது.

தனது வியாபாரத்தை முழுவதுமாக தன் பிள்ளைகள் அவரவர்கள் செய்து வந்த துறைகளிலேயே விட்டுவிட எண்ணினார்.

முழுப் பொறுப்பையும் அவர்களுக்கு அளித்து விட்டு, தான் அமைதியாகக் காலம் கழிக்க எண்ணினார்.


தன்னுடைய நண்பர் குமரனிடம் அதைப் பற்றி ஒருநாள் தீவிரமாக ஆலோசனை செய்தார்.

குமரனுடைய ஆலோசனைப்படி சொத்துகளை மூவருக்கும் சமமாகப் பங்கிட முடிவு செய்தார்.

ஆனால் மாளிகை போன்ற தன் வீட்டை பாகப்பிரிவினை செய்ய அவர் விரும்பவில்லை.

குமரனிடம் 'என் வீடு சாட்சாத் அன்ன பூரணி வாசம் செய்யுமிடம்! இங்கு தினமும் பசியுடன் வரும் பலர் உணவு உண்டு செல்கின்றனர்.

இந்த அன்னதானப் பணி நான் காலஞ் சென்ற பிறகும் தொடர வேண்டும் என்பதே என் அவா! அதனால் எந்த ஒரு மகன தொடர்ந்து அன்ன தானம் செய்வானோ, அவனிடம் வீட்டை முழுமையாக விட்டுச் செல்ல எண்ணுகிறேன். ஆனால் என் பிள்ளைகள் மூவருமே நல்லவர்கள் தான்! ஆனால், நான் நடத்தி வரும் அன்ன தானப் பணியைத் தொடர்ந்து செய்யும் மனப்பான்மையுடைய மகன் யார் என்று என்னால் சரிவர நிர்ணயிக்க முடியவில்லை! அதற்கு நீ யோசித்து எனக்கு ஆலோசனை கூறுவாய்!' என்றார் ஜெயராமன்.



"மிகவும் சிரமமான ஒரு வேலையை என்னிடம் ஒப் படைக்கிறாய்! இருந்தாலும் உனக்காக இதைச் செய்கிறேன்" என்று கூறிய குமரன் விடைபெற்றார்.

மூன்று நாட்கள் யோசித்த பின், குமரனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதைப் பற்றி ஜெயராமனுக்குத் தெரிவிக்க, அவரும் இசைந்தார். பிறகு தன்யோசனையை செயலாக்கக் குமரன் முன் வந்தார்.

முதலில் அவர் ஜெயராமனின் முதல் பிள்ளையான ரகுபதியை அழைத்து, "ரகுபதி, இமயமலையிலிருந்து சில நாட்களுக்கு முன் திரும்பி வந்த யோகி ஒருவர் என் வீட்டிற்கு விஜயம் செய்தார்.

அவர் நான்கு சக்தி வாய்ந்த பழங்கள் கொண்டு வந்தார். அவற்றை உண்பவர்கள் அசுவினி தேவர்களின் அருளினைப் பெறுவார்கள் என்றும், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வரியம் அனைத்தையும் அடைவார்கள் என்றும் கூறி அவற்றை எனக்கு அளித்துவிட்டுப் போனார்.

நான் வயதானவன் என்பதால், அவற்றில் எதையும் நான் உண்ணாமல், என் பிள்ளைகள் மூவருக்கும் அவற்றைப் பகிர்ந்தளித்துவிட்டேன்.

எஞ்சியது ஒன்றுதான்!" என்று தான் கொண்டு வந்த மாம்பழத்தைக் காட்டினார்...... (தொடரும்)




- 1450 - பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததன் மூலம் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுக்கு வந்தது.
- 1755 - சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகராதியை வெளியிட்டார்.
- 1815 - சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.
- 1865 - ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் இறந்தார். ஆன்ட்ரூ ஜோன்சன் அமெரிக்காவின் 17 ஆவது ஜனாதிபதியானார்.
- 1892 - ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.
- **1912 - ஏப்ரல் 14, 1912 அன்று இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங்கடலில் பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1503 பேர் பலியாகினர்.**
- 1923 - இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நாசிப் படைகளினால் கைப்பற்றப்பட்டிருந்த நோர்வேயின் நார்விக் நகர் மீது கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் 200 போர் விமானங்கள் வட அயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகர் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் நாசிகளின் பேர்ஜேன்-பெல்சன் வதைமுகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.
- 1986 - லிபியா மீது ஐக்கிய அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தியது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்க ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.
- 1976 - தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1452 - லியனார்டோ டா வின்சி, இத்தாலிய ஓவியர் (இ. 1519)
- 1469 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (இ. 1539)
- 1707 - லியோனார்டு ஆய்லர், சுவிட்சர்லாந்து நாட்டின் கணிதவியலாளர் (இ. 1783)
- 1874 - ஜொகான்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1957)
- 1896 - நிக்கொலாய் செமியோனொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (இ. 1986)
- 1907 - நிக்கலாஸ் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1988)

### இறப்புகள்

- 1865 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி (பி. 1809)
- 1980 - ஜீன்-போல் சார்ட்டெர், நோபல் பரிசினை ஏற்க மறுத்த பிரெஞ்சு மெய்யியலாளர் (பி. 1905)

### டைட்டானிக்



ஆர்.எம்.எஸ் டைட்டானிக் (RMS Titanic) என்பது ஒரு ஆடம்பர பயணிகள் கப்பல் ஆகும். இது வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவானது. 1912 இல் முதன் முதலாகச் சேவைக்கு விடப்பட்டபோது இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலாகும். டைட்டானிக் தனது முதற் பயணத்தின் போது ஏப்ரல் 14, 1912 இல் இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங்கடலில் பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. மோதி 2 மணி 40 நிமிடங்களில் ஏப்ரல் 15, 1912 இல் முற்றாக மூழ்கியது.

டைட்டானிக் கடலில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 1503 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு அமைதிக்காலத்தில் நடந்த மிகப்பெரும் கடல் அழிவாகக் கருதப்பட்டது.

டைட்டானிக் கப்பல் அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அது மூழ்கவே முடியாததெனவும் கருதப்பட்டது. இப்படியான ஒரு கப்பல் மூழ்கியது உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. கப்பலின் சேதமடைந்த பகுதிகளை செப்ரெம்பர் 1, 1985 இல் றொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு ஒன்று கண்டு பிடித்தது.

#### பேரழிவு


ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 14 இல் வெப்பநிலை குறைந்து கிட்டத்தட்ட உறைநிலையை அடைந்தது. கடல் மிகவும் அமைதியாக இருந்தது. 1:45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது. ஆனாலும் இச்செய்தி டைட்டானிக்கை அடையவில்லை. இரவு 11:40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பல் முற்றாக நிறுத்தப்பட்டது. பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கப்பலில் இருந்து ஆபத்து சமிக்கைகள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டன. அண்மையில் இருந்த சில கப்பல்களுக்குச் செய்திகள் அனுப்பின. ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. சரியாக அதிகாலை 2:20 மணிக்கு கப்பல் முற்றாக மூழ்கியது. மொத்தம் இருந்த 2,223 பேரில், 706 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். 1503 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கடலில் 28 °F (-2 °C) குளிர் தாங்காமையினால் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

**105**



வேலையோடு உன் உடம்பையும் நல்லாப் பார்த்துக்கோ. நீ எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும். பேரும் புகழும் இருக்க வேண்டும். நீ ஆர்ட்டிஸ்ட்டாக மட்டும் இருக்காமல் மனிதாபிமானமிக்க மனிதனாக எப்போதும் இருக்க வேண்டும். அதற்காக நான் சந்தோஷப்படுவேன். உடம்பைப் பார்த்துக்கொள்' என்று ஆறுதல் சொன்னான்.

**'என்னுடன் இரு'**

'நீ எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறாய். இன்னும் அதே வேலையில் இருப்பதைப் பார்த்தால் மனதுக்கு கஷ்டமா இருக்கு. நீ என்கூட இருந்தா எனக்கு ஒரு பரஸ்பர உதவியாக இருக்கும்' என்றேன்.

அப்போது அவனுக்கு கல்யாணம் ஆகவில்லை. அவன் என்னுடனேயே இருந்தால், எனக்கு மன அமைதி அதிகம் கிடைக்கும் என்று எண்ணினேன்.

'நான் உனக்கு டிரைவராக வருகிறேன். பரவாயில்லையா?' என்று கேட்டான்.

'டிரைவராக, மானேஜராக, செகரட்டரியாக - இல்லை எனக்கு முதலாளியாகக் கூட வரலாம்!' என்றேன்.

அவன், 'டிரைவராக வருகிறேன். ஜாலியாக இருக்கலாம்' என்றான். எனக்கு ரொம்ப சந்தோஷம்.

பத்து நாள் கழித்து ராஜ்பகதூர் வந்தான். 'இல்லேப்பா. டிரைவராக வர்றது எனக்குப் பிடிக்கலே'ன்னு சொன்னான்.

நான் இப்போதும் அவனுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் கண்டு, மகிழ்ந்து கொண்டிருக்கும் ஆத்மார்த்தமான நண்பன் ராஜ்பகதூர்.' இவ்வாறு ரஜினி குறிப்பிட்டார்.

**வள்ளி**

தன்னை நடிகனாககிய ராஜ்பகதூரை நடிகனாக்கி அழகு பார்க்க ரஜினி விரும்பினார்.

தான் தயாரித்த 'வள்ளி' படத்தில் ஒரு வேடம் கொடுத்தார். அந்தப் படத்தில் பால்காரியாக வரும் பல்லவி, "என் கணவர் ராணுவத்தில் இருக்கிறார்' என்று சொல்லி, தன்னைச் சுற்றி வரும் ஆண்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வார்.

திடீரென்று ஒரு நாள் அந்த ராணுவ வீரர் தன் மனைவி பல்லவியைத் தேடி வருவார்.

அந்த ராணுவ வீரராக நடித்தவர்தான் ராஜ்பகதூர்!

டைரக்டர் எஸ்.பி.முத்துராமனுக்கும், அவருடைய குழுவைச் சேர்ந்த 14 பேருக்கும் உதவுவதற்காக ரஜினிகாந்த் எடுத்துக் கொடுத்த படம் 'பாண்டியன்.'

**யூனிட்**

எஸ்.பி.முத்துராமன் யூனிட்டில், கேமராமேன் (விநாயகம்), எடிட்டர் (ஆர்.விட்டல்), மேக்கப்மேன் (முஸ்தபா) மற்றும் தயாரிப்பு நிர்வாகி, இணை டைரக்டர், உதவி டைரக்டர் என்று 15 பேர் உண்டு. இவர்கள், எந்த ஒரு படத்துக்கும் குழுவாகவே பணிபுரிவார்கள்.

வேறு டைரக்டர்களிடமோ, தயாரிப்பாளர்களிடமோ போய் பணியாற்றுவதில்லை.

சுமார் 15 ஆண்டுகள் எஸ்.பி. முத்துராமனுடன் இந்த யூனிட் பணிபுரிந்தது.

டைரக்டர் எஸ்.பி.முத்துராமன் 75 படங்களை டைரக்ட் செய்தவர். ரஜினியின் அதிக படங்களை (25) டைரக்ட் செய்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.


சினிமா கலைஞர்களும் சரி, தொழில்நுட்ப கலைஞர்களும் சரி, அவர்கள் புகழோடு இருக்கும் வரைதான் வருமானம். பிற்காலத்துக்கு உதவ 'பென்சன்' எதுவும் கிடையாது.

**ரஜினி உறுதிமொழி**

தன்னுடன் இணைந்து பணியாற்றிய 14 பேர்களின் எதிர்காலத்துக்கும் உதவும் வகையில் ஏதாவது செய்யவேண்டும் என்று முத்துராமன் எண்ணினார். அப்போது முத்துராமன் இயக்கத்தில் 'ராஜா சின்ன ரோஜா' படத்தில் ரஜினி நடித்துக்கொண்டிருந்தார். அவருடன் முத்துராமன் இதுபற்றிப் பேசினார்.

'என்னுடன் இணைந்து பணியாற்றிய 14 பேருக்கும் உதவ விரும்புகிறேன். எங்களுக்காக நீங்கள் ஒரு படம் செய்து கொடுக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

'நீங்கள் சொன்னதை என் மனதில் வைத்துக் கொண்டேன். தக்க சமயத்தில் உங்களுக்காகவும், உங்கள் யூனிட்டுக்காகவும் ஒரு படம் செய்து கொடுக்கிறேன்' என்றார். *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து–116

...**நா**ன் ஒன்னிய ஏய்க்க நெனைக்கல; நீ என்னிய ஏச்சுப்புட்டியே ஆத்தா. வளத்த பாசத்துல புத்தி மாறிட்டேன்; வெட்ட மாட்டேன் விட்ருன்னேன். வெட்ட வச்சுட்டியே. ஒன் வாசல்ல வந்து கெடா அறுத்திருந்தா ரத்தம் ஒனக்கு; கறி எங்களுக்கு. இப்ப ஒனக்குக் காணிக்கை செலுத்த நான் புடிச்சு வளத்த பூலித்தேவன் தோல் தானாத்தா இருக்கு; இந்தா ஏத்துக்க.

தோலத்தூக்கிக் கடைசியா ஒருதடவ மோந்து பாத்துட்டு அதுல மஞ்சத் தண்ணி தெளிச்சுக் கும்புட்டுப் போட்டா குழியில; அழுதா. வாடா மகனேன்னு அவன இழுத்துப் பெறங்கையில மண்ணுத் தள்ள வச்சா. மிச்ச மண்ண மம்பட்டி வச்சு இழுத்தா; குழிய மூடுனா. மம்பட்டிய எறிஞ்சிட்டு தலைப்பிள்ளையப் புதைச்சவ மாதிரி தலையில அடிச்சு அடிச்சு ஒப்புச் சொல்லி அழுதா.

பெத்தெடுத்து நான் வளத்த

பெரிமகன் மண்ணுத்தள்ள

தத்தெடுத்து நான் வளத்த

தங்கமகன் காங்கலையே!

புல்லு மணம் மாறலையே!

புழுக்கை இன்னும் காயலையே!

காயடிச்ச பிள்ளையப் போய்

நாயடிச்சுத் தின்னுருச்சே!

பெறவின்னு ஒண்ணிருந்தா்

பிள்ளையாக நீ வாடா!

ஆடாகப் பெறந்தாலும்

அடிவயித்தில் சுமப்பனடா!

குழி மேல விழுந்து அழுது கெடந்தவளப் பதறிப்போயித் தூக்குனாக பஞ்சாயத்துக்குப் போயி வந்த ஆளுக.

ஆத்தா செத்தே பொழச்சுக் காமிக்கிறவ- ஆடு செத்தாப் பொழைக்க மாட்டியா? எந்திரி தாயி எந்திரி.

அவ கையில குடுத்த தண்டப் பணம் பதி மூணே கால் ரூவாயையும் காளியம்மன் கோயில் உண்டியல்ல போட்டுக் கண்ணத் தொடைச்சுக்கிட்டா கருவாச்சி.

பிள்ளைக்கும் சொகமில்ல; ஒன் ஒடம்பும் சுடுது. வா எங்க வீட்டுல வந்து ரெண்டு



நா இரு; வா.

கனகாம்பரமும் பவளமும் கருவாச்சியக் கட்டிப்புடிச்

போறாக கையோட.

அழுகாதடா மகனே! அழகு சிங்கத்தத் தூக்கித்தோள்ல வச்சுக்கிட்டான் மொதலகம் பட்டி அன்னக்கொடி; கருவாச்சியக் கட்டிக்கிற வேண்டிய மொறமாமன்.

மொதக்கம்பட்டி அன்னக்கொடி நல்ல வளத்தி. ஆள் கறுப்புன்னாலும் அம்சமான அழகன். சின்ன வயசுல ஊள மூக்கு ஒழுக கருவாச்சிய மொதலகம்பட்டிக்குத் தூக்கிட்டுப் போறப்பவெல்லாம் அந்தா கேட்டு ஆத் தாகிட்ட அழுதுக்கிட்டிருக் கான் பாரு அவன்தாண்டி ஒம் புருசன்னு அன்னக் கொடியக் காமிப்பா பெரிய மூக்கி.

குடும்பம் இடையில நொந்து நொடிச்சுப் போச்சு; பஞ்சம் பொழைக்க வடக்க கண் காணாத தேசத்துக்குப்போயித் தகவல் அத்துப்போச்சு. உண்மையா ஒழச்சு, நேர்மையாப் பொழைச்சு முறுக்குச் சுட்டு வித்து நிமிந்திருச்சு குடும்பம். காலுக்குச் செருப்பு.

கைக்குக் கடி காரம்ன்னு ஏகத் தடபுடலாகி சொந்த ஊருக்குத் திரும்பி நெலபுலம் வாங்கி வட்டி வாசிக்கெல்லாம் குடுத்து, வாழ்வு பெருத்துப் போனாலும் பழைய பந்தாம் பாசம் உறவு மட்டும் கரையாத கல்லா நெஞ்சுக் குழியிலயே கெடக்கு.


*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## இளவேனிற்கால உடல் ஆரோக்கியம் சித்த மருத்துவ நோக்கில்



வேப்பம் பூ

பண்டைக்காலங்களில்எமது மக்கள் பருவகாலங்களை அனுசரித்து அவ்வக் காலங்களில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள், எடுக்கவேண்டிய உணவுகள், தவிர்க்கவேண்டியஉணவு முறைகளைத் தவிர்த்து ஆரோக்கியத்தை பேணி வந்தது யாவரும் அறிந்ததே.


சூரியன் சஞ்சரிப்பதை அடிப்படையாகக் கொண்டு அதாவது சூரியன் வடக்கு வழியாகச் செல்வது உத்தராயணம் என்றும் சூரியன் தெற்கு வழியாகச் செல்வது தட்சணாயணம் என்றும் அழைக்கப்படும். தை மாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறுமாத காலத்தை உத்தராயணம் என்றும் ஆடி மாதம் முதல் மார்கழிமாதம் வரையுள்ள ஆறுமாத காலத்தை தட்சணாயணம் என்றும் கொள்வர்.

உத்தராயண காலத்துள் இளவேனிற்காலம் அடங்கும். முன்பனிக் காலத்தின் கடைசித் திங்களாகிய தையும் பின்பனிக்காலத்து மாசி, பங்குனியும் இளவேனிற் காலத்து சித்திரை, வைகாசியும் முதுவேனிற் காலத்து முதலாம் திங்களாகிய (மாதம்) ஆனியுமாகும். இவ் இளவேனில் காலத்திலும் சூரியன் வடக்கு வழியாகச் செல்லுதலாலும் அச்சமயம் நமது நிலப்பிரிவு சூரியவழிக்கு நெருங்கி இருப்பதாலும் அஃது அதிக வெப்பத்தைப் பெறுகிறது. ஆகையால் அதில் வாழும் உயிர்கள் அதிக வெப்பத்தை அடைகின்றன.

அண்டத்திலுள்ளதே பிண்டத்திலாகையால் இஃது ஏற்படுகிறது. அவ் வெப்பம் அதிகமாயும் கூர்மையாயுமிருப்பதுடன் வரட்சியையும் தரத்தக்கதாக இருப்பதால் பூமியின் இயற்கைத் தன்மை மாறுதலடைகிறது. இதனால் கைப்பு, துவர்ப்பு, காரப்பு எனும் இம்மூன்று சுவைகளும் முறையே பின்பனி, இளவேனில், முதுவேனிற் காலங்களில் வன்மையடைகின்றது. ஆகையால் இவை வெப்பத்தையும் பலக்குறைவையும் உண்டாக்கும் தன்மையுடையனவாகின்றன.

பின்பனிக்காலத்தில் தன்னிலை மிகுதி பெற்ற கபம் அல்லது நெய்ப்புத்தன்மை இளவேனிற் காலத்து சூரிய வெப்பத்தால் தன்னிலை பிறழ்ந்துமிகவும் அதிகப்படுவது இயல்பு. இக்கபத்தின் அதிகரிப்பு பசித்தீயைக் கெடுத்துப் பற்பல கபப் பிணிகளை விளைவிக்கும். ஆகையால் இக்கோழையை அல்லது கபத்தை உடனே தணிக்க வேண்டும். இதற்கு இனிப்பு, புளிப்பு, உப்பு இச்சுவையுள்ள பொருட்களையும் பகற்தூக்கம், இராக் கண் விழித்தல் இவைபோன்றவற்றையும் நீக்கி அற்பவெப்பமுள்ள உணவுகளை உண்டும் அற்ப முயற்சியைச் செய்தும் சந்தனம், பச்சைக் கர்ப்பூரம், பயற்றம்மா போன்றவற்றை மணப்பூச்சுப் பூசியும் வெயிலில் வெப்பத்தைத் தணிக்கக்கூடிய தகுந்த இடங்களில் வாழ்ந்தும் வர வேண்டும்.

உணவுப் பழக்கவழக்கம், சமூகப் பின்னணி கொண்டதாக அமைவதைக் காணலாம். எந்தநாட்டிலும் சமூகத்தின் தேவைகளுக்கு அமைய அடிப்படையான வளங்கள் உள்ளன. ஆனால் எமது நாட்டில் அண்மைக்காலமாக மேலைநாட்டுக் கலாசாரங்கள், அவை தொடர்பான விளம்பரங்கள் உயர்வடைந்த தன்மையை அவதானிக்கலாம். இதனால் குழந்தைகள் உட்பட முதியோர் வரை சுவையூட்டிய உணவுகளின் பாவனைக்கு அடிமையாகிவிட்டனர். இன்று நகர்ப்புற பாடசாலைகளில் 30-40



வில்வம் பூ

வீதமான மாணவர்கள் உடற் பருமனுக்கு ஆளாகிவிட்டனர். பாதகமான உணவுப் பழக்கம் 15-20 வருடங்கள் தொடரின் இலகுவில் நோய்களுக்கு இலக்காகும் பரிதாப நிலை ஏற்படலாம். நடுத்தர வயதை அடைய முன்பே நோயாளியாகி உயிரைப் பணயம் வைக்கும் நிலை ஏற்படலாம்.

எளிமையானதும் நிறைவானதுமான உணவைத் தெரிவு செய்யும் மனப்பான்மையும் சாதகமான உணவுப் பழக்கவழக்கங்களும் இன்றியமையாதன. இவை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிசமைக்கும்.

இளவேனிற்காலத்தில் வேப்பம்பூ, வில்வம்பூ, இலுப்பைப்பூ போன்ற பூக்கள் இம்மாதங்களில் எமக்கு இறைவனால் அருளப்பட்ட இயற்கைப் பொக்கிசங்கள். கைப்பு இலகு குணங்கள் இருப்பதால் இலகுவில் சமிபாடடைந்து அகத்துறிஞ்சக் கூடியதாகவும் இருக்கும்.

வேப்பம்பூவானது கபத்தை சமப்படுத்தும். இரத்தத்தை சுத்திகரிக்கும். கொலஸ்ட்ரோலையும் கட்டுப்படுத்தும் தன்மைகளைக் கொண்டுள்ளது. பண்டைக்கால மக்களின் உணவுப் பயன்பாட்டில் வேப்பம்பூ முக்கிய இடம்வகிக்கிறது. தேரையர் எனும் சித்தர் வேம்பு கற்பமூலிகை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புந்தியிதைத் தீட்டுவிக்கும் புன்பிணியை யோட்டுவிக்கு
மிந்தியத்தை நன்றாயிசைவிக்கும்- சந்ததம்
வீறுண்டாங் கற்பமிகவுண்டா மெஞ்ஞான்றும்
மாறன்றா ரையமில்லாமல்

என்ற தேரையர் செய்யுளின்படி வேம்பின் சகல பகுதிகளும் அறிவு முதிர்ச்சியை அளிப்பதோடு வயிற்றுப்பூச்சி, கபப்பிணிகள், வயிற்றுப் புண், பெருநோய் ஆகியவைகளை நீக்குவதோடு உடலுக்கு வீரியத்தைக் கொடுக்கும் ஒரு கற்ப மூலியாகும்.

சித்திரை மாதத்திலிருந்து கிடைக்கும் வேப்பம்பூக்களைப் பயன்படுத்தி வேப்பம்பூ தயிர்ப்பச்சடி, வேப்பம்பூ வடகம், வேப்பம்பூரசம், வேப்பம்பூ பொடி, வேப்பம்பூ துவையல் போன்றவற்றை தயார்பண்ணி உணவுடன் எடுப்பதன்மூலம் மேற்கூறிய நற்பலன்களை அடையலாம்.

### வேப்பம்பூ பொடி

வேப்பம்பூ 10 கைப்பிடியளவு, செத்தல் மிளகாய்-5, மிளகு அரைத் தேக்கரண்டி, உளுத்தம்பருப்பு 25 கிராம், கடலைப்பருப்பு 10கிராம், உப்பு தேவையான அளவு, பசுநெய் 10 கிராம்.

வேப்பம்பூவை இளஞ்சூட்டில் வறுத்து, மிளகாய், மிளகு, கடலைப் பருப்பு, உளுத்தம்பருப்பு இவைகள் எல்லாவற்றையும் நெய்யில் தனித் தனியாக வறுக்கவும். மிளகாய், கடலைப்பருப்பு இவற்றை முதலில் அம்மியில் பொடியாக்கி பிறகு உளுந்து, மிளகு இவற்றையும் பொடியாக்கி உப்பையும் பொடித்து கலந்து ஒருபோத்தலில் வைத்துக் கொள்ளவும். சோறு உண்ணும்போது இப் பொடியில் ஒருதேக்கரண்டிபோட்டு சிறிது நெய்யும்கலந்து இளவேனிற் காலத்தில் உண்டுவர உடலை நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாகவும் இரத்தத்தைச் சுத்திகரிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

### வேப்பம்பூ துவையல்
### தேவையான பொருட்கள்

வேப்பம்பூ ஒருகைப்பிடி, புளி தேவையான அளவு, செத்தல் மிளகாய் 5, உப்பு தேவையான அளவு, தேங்காய் துருவல் - பாதி தேங்காய், ஒருபெரியதக்காளி.

வாணலியில் நல்லெண்ணெய் சிறிதுவிட்டு மிளகாயை வறுக்கவும். வேப்பம்பூவையும்வறுத்து தேங்



இலுப்பம் பூ

காய்த்துருவலை வதக்கி, அம்மியை நன்கு கழுவி மிளகாய், புளி, உப்பு வைத்து நன்கு மசிய அரைத்து வேப்பம்பூ, தேங்காய்த் துருவல் வைத்து கரகரப்பின்றி அரைத்து ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து உணவுடன் சாப்பிடலாம். இலகுவில் உணவை சமிபாடடையச் செய்து உணவை அகத்துறிஞ்சுவதுடன் குடற்புழுக்களையும் அழித்து குடலை சுத்தப்படுத்தக்கூடியதாகவும் அமையும்.

### வேப்பம்பூ தயிர்ப்பச்சடி

கெட்டியான தயிர் 250 மில்லியில் தேவையான அளவு உப்பை பொடிசெய்து போட்டு 50 கிராம் வெங்காயத்தை பொடியாக அரிந்து சேர்த்து கறிவேப்பிலை இரண்டு இணுக்கை அலசி போட்டு வேப்பம் பூவை சுத்தம் செய்து (நான்கு கைப்பிடி) எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு மணி



குங்குமப் பூ

நேரம் ஊறவிட்டு தயிரில் போட்டு ஒருமணிநேரம் கழித்து வாணலியில் 6 தேக்கரண்டி நெய் விட்டு கடலைப்பருப்பு 2 தேக்கரண்டி போட்டுச் சிவந்ததும்ஒரு செத்தலை வெட்டிப் போட்டு சிறிது கடுகு போட்டு பெருங்காயமும் போட்டு பொரிந்ததும் தயிரில் தாளிக்கவும். சிறிது கசப்பாக இருந்தாலும் உடலுக்கு சிறந்தது. எனவே சித்திரை, வைகாசி மாதங்களில் வேப்பம்பூ பச்சடி செய்து பயன்படுத்தவும்.

### வேப்பம்பூரசம்

புளியை உப்புடன் (தேவையானளவு) நீரில் ஊறப்போடவும். ஊறியதும் கரைத்து வடிகட்டி வாணலியில் சிறிதுநல்லெண்ணெய் விட்டு மிளகாய், பூண்டு, கறிவேப்பிலை, தக்காளி போட்டு தாளித்து இறுதியாக கடுகு, சீரகம், மிளகு அரைத்துச் சேர்த்து எலுமிச்சம்பழத்தைச் சாறுபிழிந்து அதில் ஊற்றவும். தேவையானளவு வேப்பம்பூக்களை கடுகைப் போட்டு தாளிக்கும்போது வறுத்து அதோடு இரசத்தைத் தாளிக்கவும். பழப்புளியை பத்தியமாகச் சுட்டுச் சேர்க்கவும்.

இதேபோல் வேப்பம்பூ வடகமும் தயாரித்து நெய் அல்லது நல்லெண்ணெய்யில் பொரித்து பயன்படுத்தவும்.

### சித்திரைக்கஞ்சி

சித்திரை மாதத்தில் அந்தப் பருவக் காலத்திற்கேற்ப சித்திரைக் கஞ்சியை பயன்படுத்துவது ஓர் பாரம்பரியமுறை. இது இலகுகுணமுள்ளதால் கபமான நெய்ப்புத் தன்மையைச் சமம் செய்யும். அதே சித்திரை மாதத்தில் இந்து ஆலயங்களில் குளிர்த்தி செய்து கூட்டான்சோறு வழங்குவதும் ஆரோக்கியமான பாரம்பரிய முறையாகும்.

இதில் சிவத்தப்பச்சரிசி பல்வேறு வகையான காய்கறிகள் முதலிய சேரும். இது ஓர்சம விகித உணவாக விளங்குகிறது. அத்துடன் இலகு ஆகாரமாகவும் இருப்பதால் இலகுவில் சமிபாடு அடையக் கூடியதாக இருக்கும். சிவத்தப்பச்சரிசியில் போலிக் கமிலம் காணப்படுகிறது. இது இரத்தத்தை விருத்தியாக்குவதுடன் நரம்புக்குறைபாடுகளையும் நீக்கும் தன்மையுடையது.

### காய்ப்பிட்டு

காய்ப்பிட்டும் ஓர் ஆரோக்கிய உணவாகும். இதற்கு சிவத்தப்பச்சரிசியை வறுக்காது நீரில் நனைத்துக் காயவைத்து இடித்து மாவாக்கி வழமையான பிட்டுப்போல குழைத்து தேவையானளவு உப்பும் சேர்த்து அதற்கு வெங்காயம், பச்சை மிளகாய், பயற்றம்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, தேவையானால் தேங்காய்ப்பூ சேர்க்கலாம். பின்னர் அதனை அவிக்க வேண்டும். இதன்போது வெண்டைக்காயை வெட்டித் தனியே அவித்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் பிட்டைக் கொட்டிக் கிளறி அதனுடன்வெண்டைக்காயையும்சேர்க்க வேண்டும். இதுவும் ஓர் சமவிகித ஆரோக்கிய உணவாகும்.

### இலுப்பைப்பூ

இளவேனிற் காலங்களில் இலுப்பைப்பூ இயற்கையாக தாராளமாகக் கிடைக்கும். மருத்துவ நோக்கில் இதன் பாவனை உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும். இலுப்பைப்பூக்களைச் சேகரித்து அல்லி தட்டி, வறுத்து, இடித்து, பனை வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து இடித்து துவைத்து உண்ணலாம். சிலர் இனிப்புச் சுவையை கட்டுப்படுத்தி கார்ப்பினைச் சேர்க்க செத்தல்மிளகாய் சேர்ப்பதுண்டு. இலுப்பைப்பூக்களானது கபத்தை கட்டுப்படுத்தி இளவேனிற் காலத்தை அடுத்துவரும் முதுவேனிற் காலமாகிய ஆனி, ஆடியில் உரு



மாதுளம் பூ

வாகும் வாதத்தையும் தடுக்கவும் உதவுகிறது. இலுப்பைப்பூக்களில் சுக்குரோசு, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து உண்டு.

இதேபோல் வில்வம்பூக்களையும் சேகரித்து ஊறல்குடிநீர் அல்லது கோப்பிப்பொடி தயார் செய்தும் பருகலாம். வில்வம்பூக்களை புளிசேர்க்காமல் ரசம் வைத்துச் சாப்பிடலாம். அல்லது வில்வம் பூக்களை உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தேனில்கலந்து சாப்பிடலாம். இதனால் வயிறு மந்தம் நீங்கி ஜீரண மண்டல உறுப்புக்கள் வலுப்பெறும்.

### மூலிகைக் குளியல்

இன்று மூலிகைக் குளியல் எனும் சிகிச்சை முறை உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் அடைந்து வருகிறது. சித்திரை வருடப்பிறப்பன்று விஷு புண்ணியகாலத்தில் மருத்து நீர் தேய்த்து தோய வேண்டும் என்று பழக்கமுள்ளது. மருத்துநீர் ஓர் மருத்துவநீராகும். அதில் பல மருத்துவ மூலிகைச் சரக்குகள் சேர்க்கப்படுகின்றன. இவை தோல் வியாதிகள், இருமல் போன்றவற்றை நீக்கி உடலில் ஏற்படும் அதிக உஷ்ணத்தையும் தணிக்கவல்லது. சித்திரைமாத இளவேனிற்காலத்தை எதிர்கொள்ள உதவும் மூலிகைக் குளியலாகும்.

### மருத்துநீரில் சேரும் மூலிகைச் சரக்குகள்:

தாழம்பூ, மாதுளம்பூ, வில்வம்பூ, விஷ்ணுகிராந்தி, அறுகு, சீதேவியார் செங்கழுநீர், பீர்க்கு இலை, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், பால், கோசலம், கோமயம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் என்பனவாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைவாதத்தை இல்லாதொழிப்போம்

## மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டிலுள்ள அனைத்து பிரிவினை வாதத்தையும் ஒழித்து நாட்டை கட்டியெழுப்புவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.**

சகல பிரிவினைவாதத்தையும் ஒழித்து இம்முறை நாட்டில் அனைத்து மக்களும் தங்கள் குடும்பங்களுடன் இணைந்து புதுவருடத்தை கொண்டாடுவீர்கள் என நான் நம்புகின்றேன் என அவர் தெரிவித்தார்.

சமய சம்பிரதாயங்களில் ஒன்றிணைந்து நிறைவேற்றவும் என அவர் மேலும் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கையர் ஒருவர் இந்தியாவில் கைது

போலி கடவுச்சீட்டு பயன்படுத்தி பிரான்ஸ் நாட்டிற்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கை பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இலங்கை பிரஜையான 28 வயதுடைய குணதாஸ், சென்னை முகவரியில் ஜெகன் என்ற பெயரில் போலி கடவுச்சீட்டு தயாரித்து பிரான்ஸ் செல்ல முயற்சித்துள்ளார்.

எயார் இந்தியா விமானத்தின் மூலம் பாரிஸ் நோக்கிச் செல்லவிருந்த இவர் குடியுரிமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-5)

## பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

கரவெட்டி ஞானசாரியார் வீதி பகுதியில் சட்ட விரோதமாக மாடு வெட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிபதி குமாரசாமி அனுமதியளித்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 40 | 40 | 70-80 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 70 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 60 | 50 | 30 |
| தக்காளி | 60 | 60 | 40 | 80 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 50 | 30 | 40 | 50 | 30 | 40 |
| கரட் | 180 | 120 | 110 | 140 | 100 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 70 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 80 | 100 | 50-60 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 70 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 80 | 90-100 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 40 | 30-50 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 40 | 50 | 80 | 50 | 70 |
| பயற்றங்காய் | 140 | 120 | 60 | 100 | 70-90 | 70 |
| லீக்ஸ் | 250 | 200 | 120 | 400 | 160 | 130 |
| பீற்றூட் | 50 | 50 | 70 | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 140 | 100 | 100 | 70-100 | 110 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 300 | 400 | 100-450 | 400 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 160 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 30 | 20 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 150 | 100 | 90 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | -- | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 140 | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# தமிழில் புத்தாண்டு வாழ்த்து பிரதமர் மோடி தெரிவித்தார்

Narendra Modi
@narendramodi
Follow

தமிழ் நண்பர்களுக்கு இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள். வரும் ஆண்டுகளில் உங்களின் எண்ணங்கள் நிறைவேற மகிழ்ச்சி பொங்க நான் பிரார்த்திக்கிறேன்

(கொழும்பு)

தமிழ் புத்தாண்டையொட்டி, பிரதமர் நரேந்திரமோடி தனது டுவிட்டர் பக்கத்தில் தமிழ் மொழியில் வாழத்தை தெரிவித்தார்.

இது குறித்து அவரது டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியில், "தமிழ் நண்பர்களுக்கு இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள். வரும் ஆண்டுகளில் உங்களின் எண்ணங்கள் நிறைவேற மகிழ்ச்சி பொங்க நான் பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்தார்.

தமிழில் வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடியின் டுவிட்டர் பதிவை அதிகம் பேர் ரீ டுவீட் செய்தனர்.

அத்துடன் கேரளா, ஒடிசா, மேற்குவங்க மாநில மக்களுக்கும் அதே மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். (இ-5)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 341

Search for people, places and things | Nagendram | Home

டனிதா சத்தியமூர்த்தி




நிசா நிசாந்தி



ஜெயராசா டிலக்ஷன்




மேரி தோமஸ்




நிதுர்சா நகுலன்




சந்தோஷ் இளஞ்சிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படக் காரணமான காரணிகள்



அனைத்துலகில் செயற்பட்ட கிளர்ச்சிக் குழுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனித்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின கடல் வழி ஏற்றுமதி இறக்குமதிகள் மற்றும் கேந்திரம் முக்கியத்துவம் மிக்க கடல்வழிப் போக்குவரத்துப் போன்றவற்றை தடுத்து நின்ற போரியல் ஆற்றல் மிக்க ஒரு அமைப்பாக விளங்கியது.

**, இவ்வாறு The Diplomat ஊடகத்தில், Peter Layton என்ற போரியல் நிபுணர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் .**

வெளிவளங்களை விவேகத்துடன் பயன்படுத்தும் கிளர்ச்சிவாதிகளுடனான அனைத்துலக மயப்படுத்தப்பட்ட உள்நாட்டுப் போர் ஒன்றை எவ்வாறு வெற்றி கொள்வது?

இவ்வாறான உள்நாட்டுப் போரகளை எதிர்த்து பல அரசாங்கங்கள் போரிடுகின்ற போதிலும் ஒரு சில வெற்றி பெறுகின்றன.

25 ஆண்டுகளாக இலங்கை அரசால் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்த்துத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது வெற்றி கொள்ளப்பட்டு நாட்டில் அமைதி உருவாக்கப்பட்டது. ஒரு பத்தாண்டிற்கும் மேலாகத் தொடரப்பட்ட யுதத்திற்கு மேற்குலக நாடுகளால ஆதரவளிக்கப்பட்ட ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானின் யுத்தங்களுடன் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தை ஒப்பிடும்போது இது எவ்வாறு வெற்றிகொள்ளப்பட்டது என ஆராயப்படுகிறது. இதற்குப் பிரதானமாக மூன்று காரணங்கள் உண்டு.

முதலாவதாக, எதிரியானவன் சண்டையிடுவதற்கு பொருத்தமான மூலோபாய நோக்கம் ஒன்று தேவை. இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டுப் போரின் முதல் 22 ஆண்டுகளும் இராணுவ வழிமுறையைக் கைக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர வேண்டிய நிலை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதுவே இப்போரை வெற்றி கொள்வதற்காக வெளிநாட்டு வல்லுனர்களால் வழங்கப்பட்ட சிறந்த ஒரேயொரு தெரிவாகக் காணப்பட்டது.

'இப்போருக்கு எந்தவொரு இராணுவ வழிமுறையும் தீர்வாகாது. தமிழ்க் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியாது' என 2006 இல், இலங்கையின் உள்நாட்டுப் போரானது இறுதிக்கட்டத்தை அடைவதற்கு முன்னர், ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரியான லெப்ரினன்ட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கத் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐந்து தடவைகள் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். ஆனால் இவை வெற்றியளிக்காது இடையில் முறிவடைந்தன. 2006 நடுப்பகுதியில் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவுக்குக் கொண்டு வந்ததுடன் நான்காம் கட்ட ஈழப்போரை ஆரம்பித்தனர்.

இதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கமும் தனது மூலோபாய நோக்கத்தை மாற்றிக் கொள்வதெனத் தீர்மானித்தது. அதாவது புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை மேற்கொள்வதை விடுத்து போரின மூலம் இவர்களைத் தோற்கடிப்பதென அரசாங்கம் தீர்மானித்தது.

இதில் வெற்றிகொள்வதற்கான ஒரு மூலோபாயத்தை வகுக்க வேணடிய நிலை இலங்கை அரசு தரப்பிற்கு ஏற்பட்டது. இதனடிப்படையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எதிர்த்து நிற்கக்கூடிய வலுவான ஒரு மூலோபாயத்தை இலங்கை அரசாங்கம் வகுத்தது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் முதல் 22 ஆண்டுகளும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் இவ்வாறானதொரு வெற்றிகரமான மூலோபாயத்தை வகுக்கவில்லை. 2005 இன் பிற்பகுதியில் இலங்கையில் புதிய அரசாங்கம் தேர்வுசெய்யப்பட்டது. இந்த அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிப்படைப் பலவீனம் என்ன என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப வித்தியாசமான மூலோபாயக் குறிக்கோளைத் தெரிவு செய்தது.

புலிகள் அமைப்பின் பிரதான பிரச்சினையாக அவர்களது மனித வளமாகும். இலங்கையின் மொத்த சனத்தொகையின் 12 சதவீதம் மட்டுமே தமிழர்களாவர். இலங்கை வாழ் தமிழ் மக்களுள் 300,000 வரையானவர்கள் மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகக் காணப்பட்டனர்.

இதற்கும் மேலாக, ஒரு அமைப்பு என்ற வகையில் புலிகளின் அதிகாரம் நலிவுற்றிருந்தது. 2006 இல், புலிகள் அமைப்புத் தனக்கான ஆளணிகளைப்பலவந்தமாக இணைத்துக் கொண்டது. இதில் சிறுவர்களே அதிகமாவர்.

போரியல் நடவடிக்கைகளில் புலிகள் பெற்றிருந்த பலம் கூட இவரகளுக்கு எதிராகத் திரும்பியது. குறிப்பாக, புலிகள் அமைப்பின் கட்டளை வழங்கல் கட்டமைப்பு, மரபு சார் போர் உத்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை மற்றும் அனைத்துலக ஆதரவை மிக ஆழமாக நம்பியிருந்தமை போன்றன புலிகளின் போரியல் பலவீனங்களாகக் காணப்பட்டன.

இரண்டாவதாக, புலிளைத் தோற்கடிப்பதற்கு மிகவும் உயரியதொரு மூலோபாய வெற்றி தேவைப்பட்டது. அதாவது இராஜதந்திரம், பொருளியல், இராணுவ நடவடிக்கைகள், தகவல் நடவடிக்கைகள், இயலுமைகள் தொடர்பாக ஆராய்தல் உட்பட பல்வேறு புலனாய்வு சார் விடயங்களை உள்ளடக்கிய உயரியதொரு மூலோபாயத்தை இலங்கை அரசாங்கம் வகுக்க வேண்டியிருந்தது.

இந்தவகையில், இலங்கையின் புதிய அரசாங்கமானது தனக்கு முன்னால் ஆட்சி செய்த அரசாங்கங்களால் வகுக்கப்பட்டு தோல்வியுற்ற குறுகிய இராணுவ மூலோபாயங்களை விடுத்து இதற்குப் பதிலாக ஒரு காத்திரமான முழுமையான மூலோபாயத்தை வகுக்கத் தீர்மானித்தது. இதன் பிரகாரம், மிகவும் அடிமட்டச் செயற்பாடுகளை வழிகாட்டுவதற்காக ஒரு முழுமையான உயரிய மூலோபாயம் வகுக்கப்பட்டது.

பொருளாதார விடயத்தில், இலங்கையின் புதிய அரசாங்கமானது மொத்தத் தேசிய உற்பத்தியின் நான்கு சதவீதத்தை பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்குவதெனவும், இராணுவத்தினருக்கு வரவுசெலவுத் திட்டத்தின் 40 சதவீதத்தை ஒதுக்குவதெனவும் புதிய அரசாங்கம் தீர்மானித்தது.

இது இலங்கை அரசின் வரையறுக்கப்பட்ட நிதி வளங்களை விட அதிகமாக இருந்ததால் சீனாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர்களை மானியமாகவும் கடனாகவும் பெற்றுக் கொண்டது. எண்ணெய் மற்றும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி உட்பட பல்வேறு நிதிசார் உதவிகள் ஈரான், லிபியா, ரஸ்யா மற்றும் பாகிஸ்தானால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளிலிருந்து தனக்குத் தேவையான 60 சதவீத இராணுவத் தளபாடங்கள் மற்றும் நிதியைப் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இலங்கை அரசாங்கமானது இராஜதந்திர ரீதியாக தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய வெற்றிகரமான நடவடிக்கைகளால் 32 நாடுகளில் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டது. இது இலங்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

முக்கியமாக, இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவு தொடரப்பட்டது. இந்தியா மட்டுமே இலங்கையின் புதிய அரசாங்கத்தால் தீட்டப்பட்ட உயரிய மூலோபாயத்திற்குக் காத்திரமான பங்களிப்பையும் தலையீட்டையும் மேற்கொள்ளக் கூடிய ஒரேயொரு நாடாகக் காணப்பட்டது.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் அமெரிக்கா பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான ஆதரவை அனைத்துலக நாடுகளுக்கு வழங்கத் தொடங்கியது. இந்த வகையில் இலங்கையின் புதிய அரசாங்கத்தால் உலகின் மிகவும் முன்னணி வாய்ந்த தற்கொலைக் குண்டுத்தாரிகளைக் கொண்ட விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிககைகளுக்கு அமெரிக்காவும் தனது ஆதரவை வழங்கியது.

வெளிநாடுகளில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவுகளுக்கு இடையூறு விளைவித்ததன் மூலமும், புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டமை, கரையோரப் பாதுகாப்புக் கலம் ஒன்றை இலங்கைக்கு வழங்கியமை மற்றும் மிக முக்கிய தேசிய கடற்படைக்கான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு முறைமை போன்றவற்றை வழங்கியதன் மூலமும் புலிகள் அமைப்பிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களுக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கியது.

கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன தத்தமது நாடுகளில் புலிகள் அமைப்பின் ஆதரவுக் குழுக்களால் புலிகளுக்காக செயற்பட்ட நிதிசேகரிப்பு வலைப் பின்னல்களை அழிப்பதற்கான சட்டத்தை இயற்றின. இதன்மூலம் புலிகள் அமைப்பின் நிதிப் பலமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

இலங்கை அரசாங்கமானது உள்நாட்டில் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டது. முன்னைய எந்தவொரு அரசாங்கங்களாலும் வெற்றிகொள்ளப்படாத யுத்தத்தை இலங்கையின் புதிய அரசாங்கம் வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கை இலங்கையர்கள் மத்தியில் ஏற்பட்டது.

இந்த அரசாங்கத்தின் போரியல் அணுகுமுறைகள் இத்தகையதொரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது. மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

போரை முன்னெடுக்கும் அதே வேளையில் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்கும் மேலாக, வறுமையை ஒழிப்பதற்கான பல்வேறு தேசியத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

எடுத்துக்காட்டாக, ஏழை விவசாயிகளுக்கான உரமானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகள் போருக்குத் தேவையான நிதிப்பற்றாக்குறையை ஏற்படுத்தியது. இதனால் வெளிநாடுகளின் நிதியுதவி தேவைப்பட்டது.

ஆனால் சமாதானத்திற்கான போர் என்பதை மக்கள் மத்தியில் நம்பச்செய்ய வேண்டியதும் மிகவும் அவசியமானதாக இருந்தது. இச்செயற்பாடுகள் தொடரப்பட்டன.

2005 இற்கு முன்னர், ஆண்டு தோறும் இலங்கை இராணுவத்திற்காக 3000 வீரர்களை இணைத்துக் கொள்வது மிகவும் கடினமானதாகக் காணப்பட்டது. 2008 இன் பிற்பகுதியில், மாதம் ஒன்றுக்கு 3000 இராணுவ வீரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டமை, மக்களின் ஆதரவு பெருகியமை போன்றன இலங்கை இராணுவ வீரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தன. குறிப்பாக 2005 இல் 120,000 ஆகக் காணப்பட்ட இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை 2009 இல் 200,000 ஆக உயர்ந்தது.

மூன்றாவதாக, இலங்கையின் புதிய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட உயரிய போரியல் மூலோபாயத்தை நிறைவு செய்வதற்கு மதிநுட்பமான மூலோபாயத்தை வரையறுக்க வேண்டிய நிலையேற்பட்டது. (தொடரும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள் அமைப்பதில் புதிய அரசு மோசடி!

## நாமல் எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை விடவும் சிறிய அளவிலான விதிகளையே புதிய அரசாங்கம் அமைத்து வருகிறது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதை நிர்மாணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கொங்கிரீற் கற்படிகளின் தடிப்புகளை குறைத்தும் செலவை குறைத்தும் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், கடந்த அரசாங்கம் வீதி அபிவிருத்தி பணிகளின் போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டது என நாட்டிற்கு வெளிப்படுத்தியுள்ளதை நிரூபிப்பதற்காகவே தற்போதைய அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வீதிகளில் பாதுகாப்பு வலயங்களை தற்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளது.

அத்துடன் வீதிகள் ஸ்திரமற்ற தன்மையில் காணப்படுகின்றது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## மகிந்தவின் ஐவர் ஜனாதிபதியுடன்

### இரகசியப் பேச்சு



ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப்பு ஒன்றை கோடிட்டு இலங்கையின் அரசாங்க பத்திரிகையான டெய்லி நியூஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

எனினும் இந்த ஐவரும் யார் என்பதை அந்த செய்தியில் குறிப்பிடவில்லை.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவான விளக்கம் ஒன்றை வழங்கிய நிலையிலேயே இந்த இரகசிய பேச்சு நடத்தப்படுவதாக டெய்லி நியூஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## பேஸ்புக் குறித்து 3 மாதங்களில் 500முறைப்பாடு

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் பேஸ்புக் தொடர்பில் 500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கணனி அவசர அழைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரிவின் ஊடகப் பேச்சாளர், பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

போலி பேஸ்புக் கணக்கு குறித்தே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஏனையவர்களின் கணக்குகளை முடக்கி தரவுகளை மாற்றியமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முறைப்பாடுகள் குறித்து பேஸ்புக் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 15 ஆயிரத்திற்கும் அதிகளவான வர்த்தகர்களுக்கெதிராக வழக்கு

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் இறுதி வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஆணையாளர் ரூமி மர்சூக் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

உரிய தரத்தில் பொருட்களை விற்பனை செய்யாமை, மோசடிகளில் ஈடுபட்டமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வர்த்தகர்கள் சுற்றிவளைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் பொருட்கள் கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் மிகவும் நிதானத்துடன் இருக்க வேண்டுமென ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கையின் ஐக்கியத்தை பாதுகாத்துக் கொள்வோம்

### எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதுவருடப் பிரார்த்தனைகளில் மெய்யான அபிவிருத்தி மற்றும் நாட்டின் ஐக்கியம் ஆகியனவற்றை பாதுகாப்பது முதன்மையாக அமைய வேண்டும்.

புதுவருட காலத்தில் உறவினர் நண்பர்களுடன் அன்பைப் பகிர்ந்து கொள்வோம்.

அனைத்து இன சமூகங்களுடனும் இணைந்து புதுவருடத்தைக் கொண்டாடுவோம்.

மதிநுட்பத்துடன் செயற்படுவதன் மூலம் நாட்டில் நிலவி வரும் அபாய நிலைமைகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### முன்னேறு முன்னேறு

ஒரு விறகுவெட்டி வழக்கமாக காட்டுப் பகுதியில் போய் விறகுகளை வெட்டி நகரங்களில் விற்பது வழக்கம். ஒரு நாள் அந்த விறகு வெட்டி காட்டைப் பார்த்துப் போய்க்கொண்டிருந்தார். அவருக்கு எதிர்தரப்பில் ஒரு துறவி வந்தாராம். அவர் அந்த விறகு வெட்டியை பார்த்து ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார். ''இன்னும் முன்னேறிப் போ'' என்று.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அன்றைக்கு வீட்டுக்கு வந்திட்டார். பிறகு உட்கார்ந்து அவர் யோசனை பண்ணினாராம். இன்னும் முன்னேறிப் போவென்று சொல்கிறாரே, அதற்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டு வழக்கமாக நாங்கள் விறகு வெட்டுகின்ற இடத்திலிருந்து இன்னும் கொஞ்சம் முன்னேறிப் போய் பார்க்கலாம். என்ன நடக்குதென்று பார்க்கலாம் என்று போனாராம்.

இதுவரைக்கும் அவர் சாதாரணமான மரத்தைத்தான் வெட்டி விற்றுவிட்டு இருந்தார். இப்ப கொஞ்சம் முன்னேறிப் போனவுடனே கொஞ்சம் விலையுயர்ந்த மரங்கள் அங்கு இருக்கிறதைப் பார்த்தாராம். ஆகா இதை நினைத்துத்தான் அந்தத் துறவி இன்னும் முன்னேறிப் போவென்று சொல்லியிருக்கிறார். நாங்கள் கொஞ்சம் முன்னேறிப் போனதனால்தான் விலையுயர்ந்த மரங்களைப் பார்க்க முடிந்தது. அந்த மரங்களை வெட்டி அதற்கான விலையை வைத்து விற்று வந்தாராம். திரும்பவும் அந்தத் துறவியினுடைய வாசகம் அவர் மனதில் ஓடிருக்கு. இன்னும் முன்னேறிப் போவென்று. பின்பு இரண்டு நாள் கழித்து அந்த இடத்தைவிட்டு இன்னும் முன் னேறிப் போனாராம். அதையும் தாண்டி முன்னேறிப் போன போது அங்கே ஓர் அதிசயம். வெள்ளிச் சுரங்கம் இருந்திருக்கிறது. உடனே அவர் வெள்ளிச் சுரங்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக வெட்டியெடுத்து விற்க ஆரம்பித்திட்டாராம்.. இப்படியே அவர் பெரிய பணக்காரராக ஆகிக்கொண்டே இருந்தாராம்.

பின்னர் திரும்பவும் அந்த யோசனை வந்திருக்கு. இன்னும் முன்னேறிப் போவென்று சொன்னாரே. ஆக இன்னும் முன்னேறிப் போனால் ஏதாவது கிடைக்குதாவென்று பார்ப்போமென்று இன்னும் முன்னேறிப் போனாராம். அங்கே போனால் அங்கே ஒரு தங்கச் சுரங்கம். தங்கத்தையெல்லாம் எடுத்து வெட்டி விற்க ஆரம்பித்தாராம். அவருடைய வாழ்க்கை ரொம்ப வேகமாக முன்னேறிப் போயிட்டு இருந்தது.

திரும்பவும் பார்த்தார். அந்த வாசகத்தைத் திரும்பவும் நினைத்துப் பார்த்தார். இன்னும் முன் னேறிப் போவென்று சொன்னாரே. இன்னும் முன்னேறிப் போய் பார்க்கலாம் என்று நினைத்தாராம். பார்த்தால் நவரத்தினங்களெல்லாம் இருந்திருக்கின்றன. அவைகளை எடுத்து விற்க ஆரம்பித்திருக்கிறார். ஆக, இப்போ அவர் ஒரு பெரிய பணக்காரர் ஆகிவிட்டார். ஆக முன்னேறிப் பொவென்று அந்தத் துறவி சொன்ன வார்த்தை அவரை அந்த அளவுக்கு உயர்த்தி இருக்கென்று ஒரு கதையை இராம கிருஷ்ண பரமஹம்சர் சொல்வார். ஆக, தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருந்தால் வெற்றிகளைக் குவித்துக்கொண்டே இருக்கலாம் என்கிறது இதன் கருத்து.

ஆனால் ஆன்மீகத்தில் ஈடுபடுகிற சிலபேர் கொஞ்சம் தவம் செய்தவுடனே கொஞ்சம் பிரார்த்தனை பண்ணிய உடனே தங்களுக்குக் கிடைக்கிற, அந்தச் சக்தியைப் பார்த்திட்டு இவ்வளவு போதுமென்று இடையிலேயே நிறுத்திவிடுகிறார்கள். அப்படி நிறுத்தக்கூடாது. இன்னும் முன்னேற வேண்டும். இன்னும் முன் னேற வேண்டும். அப்படி முன்னேறி முன்னேறென்று போகும் போது தவ வலிமை அதிகமாகிக் கொண்டே போகும். பிரார்த்தனையுடைய சக்தி அதிகமாகிக் கொண்டே போகும்.

அதனால் கொஞ்ச ஜெபம் செய்து அதனால் கிடைத்த பலன்களை நான் அனுபவித்துக்கொண்டேன். எனக்கு இது போதும் என்ற நிறுத்தக் கூடாது. மேலும் மேலும் முன்னேறிக்கொண்டே போக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறதற்குத்தான் அவர் இந்தக் கதையைச் சொல்கிறார். அப்படி விழிப்புணர்வில்லாத ஆன்மீகம் பயன்படாது என்பது தான் இந்தக் கதையின் கருத்து.

இப்ப பாருங்கள் ஓர் ஆன்மீக சொற்பொழிவாளர் ஓர் இடத்தில் தொடர் சொற்பொழிவு பண்ணிட்டு இருந்தார். அதற்கு நல்ல கூட்டம் வந்திருந்தது. ஆனால் அந்த மேடைக்கு பக்கத்தில் ஒரு வயதான பெரியவர் ஒருத்தர் உட்கார்ந்து நன்றாக தூங்க ஆரம்பித் தார். அது சொற்பொழிவு செய்கிறவருக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்திருக்கிறது. தன் பேரனையும் கூடவே கூட்டிட்டு வருவாராம் தூங்குகின்ற அந்தப் பெரியவர்.

அந்தச் சிறுவனைக் கூப்பிட்டு சொற்பொழிவாளர் சொல்கிறார். நான் உனக்கு தினமும் 2 ரூபாய் தருகிறேன். உங்கள் தாத்தாவை நீ தூங்கவிடாமல் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் தூங்குகிறது எனக்கு அவமானமாக இருக்கென்று சொன்னாராம். சரியென்று அந்தப் பையன் சொல்லிவிட்டான். அவரும் 2 ரூபாய் கொடுத்தார். அதன்படி இரண்டு நாட்களாக அந்தத் தாத்தா தூங்கவில்லை. ஆனால் மூன்றாவது நாள் திரும்பவும் தூங்க ஆரம்பித்துவிட்டாராம். பையனைக் கூப்பிட்டு அந்தச் சொற்பொழிவாளர் கேட்டு இருக்கிறார். நான்தான் இரண்டு ரூபாய் தந்தேனே அவரை தூங்க விடாமல் செய்வதற்கு. திரும்ப தாத்தா தூங்க ஆரம்பித்து விட்டாரேயென்று. அதற்கு அந்தப் பையன் சொன்னானாம் எங்கள் தாத்தா தூங்கிறதை தொந்தரவு செய்யா தேயடா என்று எனக்கு 5 ரூபாய் கொடுத்தார். அவர் தினமும் 5 ரூபாய் கொடுக்கிறதாலதான் நான் அவரை எழுப்புகிறதில்லை. இப்படியெல்லாம் ஆன்மீக அனுபவமிருந்தால் எப்படி?

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "மன்மத" வருட இராசி பலன்கள்



**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**ராகுப் பெயர்சசியால் யோகம் சேரும்! சாமர்த்தியமாகப் பேசி எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மிதுன ராசி நேயர்களே!**

அனைத்துக் காரியங்களிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் விதத்தில் சனி, குரு வக்ரத்தோடு ஆண்டு தொடங்குகிறது. ஆனால், ஆண்டின் தொடக்க நாள் சந்திராஷ்டமமாக இருக்கிறதே என்று நீங்கள் நினைக்கலாம். அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை. அஷ்டமத்துச் சந்திரனைக் குரு பார்க்கிறார் அல்லவா? எனவே, எதிர்பார்ப்புகள் தாமதமானாலும் கூட கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும்.

அடுத்தவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுபவர்கள்! ஆன்மிக நாட்டம் அதிகமிருந்தாலும் அதை வெளிக்காடடிக் கொள்ள மாட்டீர்கள். நகைச்சுவை உணர்வு உங்களிடம் அதிகம் இருப்பதால் நண்பர்களுக்கு மத்தியில் ஏற்படும் பகைச்சுவை உணர்வுகளைப் போக்கிக் கொள்வீரகள். நீங்கள் எடுத்த முடிவையே முத்தாய்ப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் ராசிக்கு சப்தமாதிபதியாக குரு அமைகிறார். அவர் உங்கள் ராசிநாதன் புதனுக்கு அனுகூலமானவர் இல்லை. மேலும் கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். எனவே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதிக கவனம் செலுத்தினால் தான் வருங்காலத்தை நலமாக அமைத்துக் கொள்ள இயலும்.

**வக்ர இயக்கத்தால் வளர்ச்சி கூடும் நேரம்!**

ஆண்டின் தொடக்கத்தில் 2 இல் குரு வக்ரம், 6இல் சனி வக்ரம், 12இல் சொந்த வீட்டில் சுக்ரன். இப்படி இருக்கும் யோகம் யாருக்கும் அமையாது. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும் பொழுது யோகத்தைக் கொடுக்கும்.

எனவே, 2 இல் இருக்கும் குரு திரண்ட செல்வத்தை வழங்கும். தெய்வீகச் சிந்தனையை மேலோங்க வைக்கும். புதிய ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொடுக்கும். மேல்மக்கள் தொடர்பு கிட்டும். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும. கல்யாணக் கனவுகளை நனவாக்க நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். வீடு கட்டும் அல்லது வாங்கும் வாய்ப்பு வெகு நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்தும் அது நடக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு ஆண்டின் தொடக்கம் அதைப் பூர்த்தி செய்துகொடுக்கப் போகிறது.

உங்கள் ராசிக்கு 8, 9-க்கு அதிபதியானவர் சனி. அந்த சனி பகவான் அஷ்டமாதிபதியாகவும் இருப்பதால் அவர் வக்ரம் பெறும் பொழுதெல்லாம் வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பது பழமொழியல்லவா? எனவே, தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மாறும். தடைக் கற்கள ஒவ்வொன்றாக விலகும். கடைதிறப்பு விழாக்களையும், கட்டடத் திறப்பு விழாக்களையும் நடத்திப் பார்ப்பீர்கள். ஆரோக்கியத் தொல்லைகள் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் இருந்த தொய்வுகள் அகலும். உடன் பணிபுரிபவர்கள் உங்களுக்கு இடையூறாக இருக்கிறார்களே என்று நீங்கள் நினைக்கலாம். இட மாற்றம், இலாகா மாற்றங் கள் ஒரு சிலருக்கு எதிர்பாராத விதத்தில் வந்து நன்மைகளைக் கொடுக்கும்.




சுக்ர பலம் நன்றாக இருப்பதால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பெண் வழி பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அனைத்துக் கடனும் தீர்ந்து ஆனந்தம் உருவாகப் போகிறது.

**குரு பார்வையால் வரும் யோகம்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான் 5.7.2015 இல் சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். எல்லா கிரகங்களுக்கும் உள்ள பார்வையைக் காட்டிலும் இந்த குருவின் பார்வைக்கு மட்டும் சிறப்புப் பலன்கள் உண்டு.

உங்களைப் பொறுத்தவரை தற்சமயம் ஆனி 20 ஆம் திகதி முதல் உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் வரப்போகிறார். அந்த ஸ்தானம் சகோதர ஸ்தானம் மட்டுமல்ல, முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்ல முடிவெடுக்க வைக்கும் வெற்றி ஸ்தானமும் ஆகும். அந்த வெற்றிக்குரிய வாய்ப்புகளை அதன் பார்வை தான் கொடுக்க வேண்டும்.

**முன்னேற்றம் தரும் மூன்றாமிடத்து குரு!**

இதுவரை உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் மூன்றாமிடமான சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கிருந்து கொண்டு அதன் அருட்பார்வையை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களிலும் செலுத்துகிறார். இதன் விளைவாக அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. அந்த மூன்று இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் துரிதமாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கப் போகின்றது.

**ஏழினைக் குருதான் பார்த்தால**
**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**
**ஒன்பதைக் குருதான் பாரத்தால**
**பொன் பொருள் வந்துசேரும்!**
**பதினொன்றை குருதான் பார்த்தால்**
**பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் கல்யாணக் கனவுகள் நனவாகும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும்.

ஒன்பதாமிடத்தைப் பார்க்கும் குருவால் பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். புண்ணிய யாத்திரைகள் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. பெண் குழந்தைகளின் சீர்வரிசைச் சாமான்களை சேர்க்க முடிவு செய்வீர்கள்.

பதினோராமிடத்தைக் குரு பார்ப்பதால் பயணங்களால் உங்களுக்கு பலன் கிடைக்கும். விமானப் பயணங்களும் விரும்பிய விதத்தில் ஒரு சிலருக்கு அமையலாம். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும். புதிய தொழிலில் உங்கள் கவனத்தைச் செலுத்துவீர்கள்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அந்த நேரத்தில் கும்பத்தில் கேது சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு இதுவரை அர்த்தாஷ்டம ராகுவாகச் சந்தித்தவர் இப்பொழுது விலகுவதால் முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். சின்னச்சின்ன ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

போராடிய சகோதர வர்க்கத்தினர் உங்கள் சொல்கேட்டு நடக்க முன்வருவர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு உன்னத வாழ்க்கையினை அமைத்துக் கொள்வீர்கள். 9 ஆம் இடத்து கேதுவின் ஆதிக்கத்தால் இதுவரை பாசம் காட்டாத பெற்றோர் பாசம் காட்டுவர். விரோதங்கள் விலகும். வேற்று மதத்தாரோடு செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். 12.6.2015 முதல் துலாம் ராசியில் வக்ரமடைகிறார். 30.7. 2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 5.9.2015 இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியடைகிறார்.

பிறகு 26.3.2016 இல் மீண்டும் விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகிறார். இப்படி இந்த ஆண்டு முழுவதும் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதும், வக்ர நிவர்த்தியாவதும் மாறி, மாறி நடைபெற்றுக் கொண்டே இருகக கிறது.

துலாத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துக்களாலும், பத்திரப்பதிவிலும் பிரச்சினைகள் உருவாகி மறையும். பிள்ளைகளும் தன்னிச்சையாகச் செயற்படலாம். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ள பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உண்டு. அன்பு செலுத்துவதன் மூலமும், அதிக விழிப்புணர்ச்சியை மேற்கொள்வதன் மூலமும் இக்காலத்தை பொற்காலமாக மாற்றிக் கொள்ளலாம்.

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறும்பொழுதெல்லாம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும், வேலை வாய்ப்பில் முன்னேற்றமும் உண்டு. சனிக்கிழமைதோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவது நல்லது.

**குருவின் வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறும் பொழுதும் 07.02. 2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறும் பொழுதும் நல்ல பலன்களே உங்களுக்கு வந்து சேரும். உதிரி வருமானங்கள் பெருகும். உறவினர் பகை அகலும். அதிகச் செலவு செய்து முடிக்க வேண்டிய காரியம் குறைந்த செலவிலேயே முடிவடையும். வியாழனின் விரதமும், தென்முகக் கடவுளின் வழிபாடும் நன்மைகளை வழங்கும்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ராசிநாதன் புதனைப் பலப்படுத்த இலக்குமி சமேத விஷ்ணுவை வழிபாடு செய்யுங்கள். புதன்கிழமை வழிபட்டால் பொருள் வளம் பெருகும். மேலும் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபடுவதன் மூலம் வெற்றி செய்தியை வரவழைத்துக் கொள்ள இயலும். மேலும் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை செய்தால் தினசரி வாழ்க்கையில் பண மழை கொட்டும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

மிதுன ராசியில் பிறந்த பெண்களே, ஆண்டின் தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கூட இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். பணப்புழக்கம் நனறாக இருந்தாலும் மன அமைதி கிடைக்குமா என்பது சந்தேகம் தான். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை கூடும். விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்வது நல்லது. குருப் பெயர்ச்சிக்கு பிறகு ஓரளவு நற்பலன்களும் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு யோக வாய்ப்புகள் அதிகரிப்பும் உண்டு.

கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதியும் தீட்டிய திட்டங்கள் ஒவ்வொன்றாக ஆவணிக்கு மேல் நடைபெறும்.


உத்தியோகத்தில் எதிர்பார்த்த இலாகா மாற்றமும், உயர்பதவியும் வந்து சேரலாம். விஷ்ணு வழிபாடு வேதனை தீர்க்கும். சர்ப்ப சாந்தி பாரிகாரம் செய்வது சந்தோஷம் வழங்கும்.


## ராகுப் பெயர்ச்சியால் யோகம் சேரும்!


**நாளை கடகம்...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பரித்த அடியவர்கள்











வரலாற்று சிறப்பு மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திரு விழா பல வருடங்களுக்குப் பின்னர் புதுவருடப்பிறப்பான நேற்றையதினம் வெகு சிறப்பாக இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ அரோகரா கோசத்துடன் விநாயகப் பெருமான் காலை 10.30 மணியளவில் தேரேறி ஆரோகணித்தார்.

(படங்கள்: உ.சாளின்)








யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில மன்றத்தின் வருடாந்த சஞ்சிகை Jacolled Spring மற்றும் Blossoms சஞ்சிகை என்பன அண்மையில் வெளியிடப்பட்ட போது...




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்க ளுக்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்க ளுக்கும் இடையிலான சிநேகபூர்வமான துடுப்பாட்டப்போட்டி அண்மையில் கல்வியியற் கல்லூரியின் வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்



நாம் நண்பர்கள் அமைப்பினூடாக யாழ்ப்பாணம் பெரிய புலம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது







இடம்பெயர்ந்த இடைத்தங்கல் முகாம்களின் பொது நிர்வாகத்தினரால் மல்லாகம் கோணப்புலம் ஆர்.டி.எஸ். மைதானத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த தேர்தலின் போது பயன்படுத்திய ஹெலிகொப்டர்களுக்கான

# கட்டணத்தைச் செலுத்துவது ஜனாதிபதியின் கடமையாகும்

## விமல் கூறுகிறார்

**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்திய விமானப்படையின் ஹெலிகொப்டர்களுக்கான கட்டணத்தை செலுத்துவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கடமை என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தியதை தான் ஏற்றுக்கொள்வதாகவும், அதற்கான ஏற்பாடுகளை செய்தவர் முன்னணியின் தலைவரே எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த விமான பயணங்களுக்கான விலைப் பட்டியலையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெயரிலேயே பதியப்பட்டுள்ளது.

அதற்கு தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்புக் கூற முடியாது.

எனவே அதற்கான கட்டணத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி மற்றும் செயலாளர் உட்பட அனைவரும் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஹெலிகொப்டருக்கான செலவுகளை விமானப்படைக்கு செலுத்த வேண்டிய கடமைகள் உள்ளன.

சக வேட்பாளரிடையே முரண்பாடு காணப்பட்ட போதிலும் தேர்தல் பிரசார செலவுகளை தவிர்ப்பது நெறிமுறையற்றது என அவர் மேலும தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஹெலிகொப்டர் பலவற்றை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தனது சக வேட்பாளருக்கு அவ்வாறான சந்தர்ப்பத்தினை வழங்காமல் இருப்பது சாதாரணமான ஒரு விடயமா? என கேள்வி எழுப்பியிருந்தார்,

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஹெலிகொப்டர் அல்ல விமானமே பெற்றிருந்தாலும் அதற்கான கட்டணத்தை செலுத்துவதற்கு நிதி உதவிகள் வெளிநாடுகளில் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

## வடக்கு மாகாணக் கல்வி நிலையை பலவழிகளில் முன்னேற்ற வேண்டும்

### யுனிசெப் பிரதிநிதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக யுத்தத்தின் தாக்கங்களால் பாதிப்புற்றிருந்த வடமாகாணக் கல்வி நிலையை பல வழிகளில் முன்னேற்ற வேண்டி யுள்ளது என இலங்கையின் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான யுனிசெப் பிரதிநிதி கலாநிதி எஸ். கிரிஷ்டின் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக யாழ். பணிமனையில் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இலங்கையில் சிறுவர் நேய அடிப்படையில் பாடசாலைகள் செயலாற்ற யுனிசெப் நிறுவனம் பெருமளவு பங்களிப்பை தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது. மனிதத்துவ அணுகுமுறையில் கல்வி முகாமைத்துவ முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். இதற்கான அர்ப்பணிப்புக்கள் பெருமளவு தேவையாகவுள்ளன.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களை முறையாக முகாமை செய்யும் தந்திரோபாயங்கள் மேலும் விஸ்திரிக்கப்பட வேண்டும். இதற்கான குறுங்காலப் பயிற்சிகள், கற்றல் அனுபவங்கள் சுயமதிப்பீட்டு செயற்றிட்டங்களை அமுலாக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்களுக்கான தொடர் கல்விப் பயிற்சிகளில் சிறுவர் நேய அணுகுமுறை சார்பான விடயங்கள் இணைக்கப்பட்டிருந்த போதும அவற்றைக் கற்று மனப்பாங்கு மாற்றம் நிகழ்ந்ததான அறிகுறிகள் திருப்தியளிப்பதாக இல்லை.

குறிப்பாக யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு, ஆசிரியர்கள் ஆலோசனை, வழிகாட்டல்சேவையை வழங்கும் தேர்ச்சிகளைப் பூரணமாகக் கொள்ளவில்லை. இதனால் பல சிறார்கள் பல பிரச்சினைகளுடன் கல்வி கற்க முடியாது வேதனைகளுடன் பாட சாலைகளுக்குச் செல்கிறார்கள். எனவே பாடசாலைச் சூழலை பொருத்தமுள் ளதாக மாற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-78)

## போதையில் வாகனம் செலுத்திய 283 சாரதிகள் கைதாகினர்

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் குடிபோதையில் வாகனம் செலுத்திய 283 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 141 பேரும், 115 முச்சக்கரவண்டி சாரதிகளும் பேருந்து சாரதிகள் மூவரும், 12 லொறி சாரதிகளும் அடங்குவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குடிபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைதுசெய்வதற்கான திடீர் சோதனை நடவடிக்கைகள் கடந்த 11ஆம் திகதி முதல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 11ஆம் திகதி முதல் இது வரை மதுபோதையுடன் வாகனம் செலுத்திய 605 சாரதிகளை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

## முதலாவது திறந்தவெளி மிருகக்காட்சி எதிர்வரும் 17ஆம் திகதி திறந்து வைப்பு

இலங்கையின் முதலாவது திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை எதிர்வரும் 17ஆம் திகதி பின்னவலயில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த திறந்தவெளி மிருகக்காட்சிச் சாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 44 ஏக்கர் நிலப் பகுதியில் இத்திறந்தவெளி மிருகக் காட்சிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு சிறுத்தைகள், கரடிகள், மான்கள், முதலைகள் உட்பட பல விலங்குகளை கண்டு ரசிக்க முடியும்.

இத்திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை நிர்மாணத்திற்கு 862 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், 488 மில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## துஷாரப் பெரேரா பொலிஸாரால் கைது

ஐக்கிய தேசியக் கட்சியின் மஹர தொகுதி அமைப்பாளராக இருந்து, கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆளும்தரப்புக்கு தாவிய துஷாரப் பெரேராவை இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி ஆவணங்கள் தயாரித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கும் துஷாரப் பெரேராவுக்கு எதிராக காசோலை மோசடி குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

இவர், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### கதிரேசு கனகசபாபதி



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா செட்டிகுளம் 2ஆம் பண்ணை பாவற் குளம் 9ஆம் வட்டாரம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு கனகசபாபதி கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப 11மணியளவில் அரசடிகுளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### நீக்கிலாஸ் தேவராஜா



மன்னார் முருங்கன் புத்திரர் கண்டானைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாஸ் தேவராஜா கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று புதன்கிழமை பி.ப2.30மணியளவில் Eglise Notre Dame De Livry Gargan,25 Rue de l'Eglise, 93190 Livry-Gargan,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்ய ப்படும்.


### கலாநிதி சின்னத்துரை சின்னையா



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியைவதிவிடமாகவும்கொண்ட சின்னத்துரை சின்னையா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பி.ப 5மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### ஸ்ராலின் சண்முகலிங்கம்



நல்லூர் நாயன்மார் வீதியைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Winterswijk ஐ வதிவிடமாக வும் கொண்ட ஸ்ராலின் சண்முகலிங்கம் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை நண்பகல் 12மணி முதல் பி.ப3மணிவரை GUV Crematorium En Uitvaart Centrum, Romienendiek 2A,7122 PA Aalten, Netherlands என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


### திருமதி சுப்பிரமணியம் சிவனேஸ்வரி



அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவனேஸ்வரி கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அல்லைப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


### மனோரஞ்சிதமலர் சீவரத்தினம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சேர் பொன் இராமநாதன் வீதி திருநெல்வெலியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோரஞ்சிதமலர் சீவரத்தினம் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி.வரதராசா சிவக்கொழுந்து



செட்டிக்குறிஞ்சி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து வரதராசா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சம்பில்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 இலட்சம் சோமாலியர்களையும் 3 மாதங்களில் வெளியேற்றவும்

## ஐ.நாவிற்கு கென்யா கெடு

(நைரோபி)

**ஆபிரிக்க நாடான கென்யாவில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள 6 இலட்சம் சோமாலியர்களை 3 மாதங்களில் வெளியேற்ற வேண்டும் எனவும் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் தாங்களாகவே அவர்களை வெளியேற்ற நேரும் எனவும் ஐக்கிய நாடுகள் சபைக்கு கென்யா அரசு கெடு விதித்துள்ளது.**

சோமாலியா நாட்டில் கடந்த 1991ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் மூண்டபோது ஏராளமானவர்கள் அயல் நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவ்வாறு அண்டை நாடான கென்யாவில் மட்டும் 6 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை உதவியுடன் இந்த அகதிகள் முகாம்கள் கண்காணிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் தங்கள் நாட்டில் உள்ள அகதிகளை 3 மாத காலத்திற்குள் வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கென்யா அரசு திடீரென ஐ.நாவை கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு துணை ஜனாதிபதி வில்லியம் ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கென்யாவில் உள்ள அகதிகளை 3 மாத காலத்திற்குள் வெளியேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை கேட்டுக்கொண்டுள்ளோம்.

தவறும்பட்சத்தில் நாங்களாகவே அவர்களை வெளியேற்றி விடுவோம்' என்று தெரிவித்துள்ளார்.

கென்யாவில் உள்ள பல்கலைக்கழக கல்லூரிக்குள் கடந்த 2 ஆம் திகதி புகுந்த சோமாலிய தீவிரவாதிகள் அங்கு இருந்த மாணவர்கள் உள்ளிட்ட 148 பேரை கொலை செய்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கென்யா, சோமாலிய அகதிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் ஆபிரகாம் லிங்கனின் இறுதி ஆசனம்



அமெரிக்காவில முதன் முதலில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன், சுடப்பட்ட போது அமர்ந்திருந்த இருக்கை மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

மிக்சிகன் மாகாணத்தின் டியர்போன் பகுதியில் உள்ள ஹென்றி போர்டு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் இந்த ஆசனம், லிங்கன் கொல்லப்பட்ட 150 ஆவது ஆண்டு தினத்தையொட்டி இன்று 15 ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அமெரிக்க உள்நாட்டு போர் 1865ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. அந்த ஆண்டின் புனித வெள்ளியன்று (ஏப்ரல் 14) இரவில், வோஷிங்டனில் உள்ள தியேட்டர் ஒன்றில், ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தனது மனைவியுடன் 'அவர் அமெரிக்கன் கசின்' என்ற நாடகம் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த பிரபல நடிகரும், கான்பெடரேட் அமைப்பின் உளவாளியுமான ஜான் வில்கிஸ் பூத், லிங்கனை துப்பாக்கியால் சுட்டார். இதில் படுகாயமடைந்து கோமாவில் தள்ளப்பட்ட அவர், மறுநாள் காலையில் உயிரிழந்தார். (இ)




# கின்னஸ் பட்டியலில் ஜியோமி!



(பீஜிங்)

ஸ்மார்ட்போன் உலகை கலக்கி வரும் சீன நிறுவனமான ஜியோமி, ஒரே நாளில் 20 இலட்சம் ஸ்மார்ட் கைபேசிகளுக்கு மேல் விற்பனை செய்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது.

சீனாவின் ஆப்பிள் என்று அழைக்கப்படும் ஜியோமி, ஸ்மார்ட்போன் உலகில் தனது பட்ஜெட் கைபேசிகளால் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தியாவிலும் ஜியோமி, ஒன்லைன் விற்பனை மூலம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிலையில் ஜியோமி அண்மையில் சீனாவில் சிறப்பு ஒன்லைன் விற்பனையை அறிவித்தது.

நிறுவனம் தொடங்கி ஐந்தாண்டு நிறைவடைவதை முன்னிட்டு "எம்.ஐ பேன் பெஸ்ட்" எனும் பெயரில் இந்த சிறப்பு விற்பனை அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை அடுத்து 24 மணி நேரத்திற்குள், 21 இலட்சத்திற்கும் மேல் ஸ்மார்ட்போன்கள் விற்பனை ஆனதாக ஜியோமி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்காக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறுவதற்கான சான்றிதழும் கிடைத்திருப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிறப்பு விற்பனையில் ஸ்மார்ட் கைபேசிகள் தவிர, துணை பொருட்களும் இலட்சக்கணக்கில் விற்பனையாகியுள்ளதாக ஜியோமி தெரிவித்துள்ளது. ஒன்லைனில் ஓடர் செய்யப்பட்ட ஸ்மார்ட் கைபேசிகள் நாடு முழுவதும் உள்ள ஜியோமி மையங்கள் மூலம் 12 மணி நேரத்திற்குள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# நோபல்பரிசு பெற்ற எழுத்தாளர் குன்ட்டர் கிராஸ் காலமானார்



நோபல் பரிசுபெற்ற பிரபல ஜேர்மன் எழுத்தாளர் குன்ட்டர் கிராஸ் (வயது-87), லூபெக் நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி படுதோல்வி அடைந்த பின்னர், அந்த நாட்டில் மீண்டும் ஜனநாயக நீரோட்டத்துக்கு வலு சேர்த்ததில் அவர் முக்கிய பங்கு ஆற்றினார்.

சிற்பக் கலையில் தேர்ச்சி பெற்ற அவர், இலக்கியத்தில் தனது கவனத்தைத் திருப்பினார். முதலில் கவிதைகள், நாடகங்கள் எழுதினார். ஓவியத்திலும் நல்ல பயிற்சி பெற்றார்.

1959 இல் குன்ட்டர் கிராஸ் எழுதிய முதல் நாவலான "தி டின் டிரம்" மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. நாஜிக்களின் எழுச்சியைத் தொடர்ந்த அரசியல் சூழலில் வளரும் ஒரு சிறுவனின் கதையை அந்த நாவல் கூறுகிறது.

அந்த நாவலின் மிகப் பெரிய வெற்றி அவரை வியப்பில் ஆழ்த்தியதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து குன்ட்டர் கிராஸ் எழுதிய பல நாவல்கள் உலகெங்கும் அவருக்குப் பெரும் வாசகர் வட்டத்தைத் தேடித் தந்தது.

இளம் வயதில் ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லரின் துணை இராணுவப் படையில் பணியாற்றியதாக அவரது சுயசரிதையில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து பரவலான கண்டனத்துக்கு ஆளானார்.

1999 ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. போருக்குப் பிந்தைய ஜேர்மன் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டதற்காக, நோபல பரிசுக் குழுவினர் அவருக்குப் பிரத்தியேகப் பாராட்டைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அமெரிக்காவில் ஆதரவின்றி தவிக்கும்

# ஒராங்குட்டான் குரங்கை பார்க்கக் குவிந்தமக்கள்

அமெரிக்காவின் உடாங் மாகாணத்தில் உள்ள வன உயிரியல் பூங்காவில்பிறந்து 5 மாதங்களே ஆன குட்டி ஒராங்குட்டான் குரங்கை பார்க்க பார்வையாளர்கள் முதன் முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சால்ட்லேக்நகரத்தில்உள்ள கோகுல் வன உயிரியல் பூங்காவில் இந்த குட்டி ஒராங்குட்டான் குரங்கு தாய், தந்தையை இழந்து அந்நாட்டு மக்களிடையே பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது.



இதனால் பார்வைக்கு அனுமதிக்கப்பட்ட முதல் நாளிலேயே 9 ஆயிரம் பார்வையாளர்களை கவர்ந்தது.

கடந்த 7 ஆண்டுகளாக [illegible] பவுல் போட்டிகளில் வெற்றியை [illegible]த்து வந்த எலி எனும் இதன் தந்தை புற்றுநோயால் உயிரிழந்தது.

இந்தக் குட்டி பிறந்த சில நாட்களிலேயே தாயும் உயிரிழந்ததால் ஆதரவு இல் லாமல் தனியாக வாழ்ந்து வருகிறது.இந்த பெண் ஒராங்குட்டான் குட்டியின் திறமையை அடுத்த ஆண்டு சோதித்து போட்டிகளில் வெற்றியை யூகம் செய்யும் வேலையை இதற்கு வழங்கலாமா? வேண்டாமா? [illegible] முடிவு செய்யவுள்ளனர். (இ-5)

# மகாத்மா காந்தியின் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது

தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தியின் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது.

தவறான எண்ணத்துடன் காந்தியின் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

ஜொகனஸ்பர்க் நகரிலுள்ள அவரது சிலையின் மீது கடந்த சனிக்கிழமை வெள்ளை பெயின்ட் ஊற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் ஐந்து லீற்றர் பெயினட் வாளியும், "காந்தி போக வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்த பதாகைகளும் இருந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தென்னாபிரிக்கா இருந்தபோது நிறுவப்பட்ட பல சிலைகள் இப்போது அங்கு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

கேப் டவுண் பல்கலைக்கழகத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய செயற்பாட்டாளரான சிசில் ரோட்ஸின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சிலை அகற்றப்பட வேண்டும் எனும் போராட்டம் வெற்றி பெற்று, அவரது சிலை அங்கிருந்து அகற்றப்பட்ட பிறகு, காந்தி சிலைகள் உட்பட பல சிலைகள் அங்கு சேதமாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப்பின்பற்றுதல் வேண்டும்

## பா.ஜ.க. எம்.பி.சர்ச்சைப் பேச்சு

(சென்னை)

**இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கடுமையாகக் கடைப்பிடிக்க சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் இந்துக்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள முன்வருவது போல் முஸ்லிம்களும் முன்வர வேண்டும். அனைவருக்கும் ஒரே சட்டம் தேவை. நமது ஆட்சியில் ஒரு பிரிவினருக்கு திருப்தி செய்யும் போக்கு கூடாது என்றும் பா.ஜ.க. எம்.பி. சாக்ஷி மஹராஜ் சர்ச்சைக் குரிய கருத்தைத் தெரிவித்துள்ளார்.**

மேலும், அத்தகைய சட்டத்தை கடைப்பிடிக்காதவர்களின் வாக்குரிமையையும் இரத்து செய்ய வேண்டும் என்று சர்ச்சைக்குரிய ஒரு கருத்தையும் அவர் கூறியுள்ளார்.

இந்துக்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள முன்வருவது போல் முஸ்லிம்களும் முன்வர வேண்டும். அனைவருக்கும் ஒரே சட்டம் தேவை. நமது ஆட்சியில் ஒரு பிரிவினருக்கு திருப்தி செய்யும் போக்கு கூடாது.

முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் அனைவருக்குமான பொதுச் சட்டம் தேவை என்றே கூறுகிறேன்.

4 குழந்தைகள் பற்றி பேசினால் நிறைய சலசலப்புகளும் சர்ச்சைகளும் எழுப்பப்படுகின்றன. ஆனால் 4 மனைவிகளை வைத்துக் கொணடு 40 குழந்தைகளை அவர்கள் பெற்றுக் கொள்வது பற்றி ஒருவரும் வாயைத் திறப்பதில்லை.

குடும்பக் கட்டுப்பாடு அவசியம். நாடு சுதந்திரம் அடைந்த போது மக்கள் தொகை 30 கோடி இருந்தது.

தற்போது 130 கோடி. இதற்கு யார் பொறுப்பு? எனவே அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரே சட்டம் தேவை, இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் என்று அனைவருக்கும் ஒரே சட்டம் தேவை" என்று சாக்ஷி மஹராஜ் தெரிவித்துள்ளார். (இ-5)

# விமான ஒப்பந்தம் இரத்தாக வாய்ப்பு

(புதுடில்லி)

பிரான்ஸ் நாட்டின் தஸ்சால்ட் ஏவியேசன் நிறுவனத்துடன், 126 ரபேல் போர்விமானங்கள் வாங்குவதற்கு போடப்பட்ட ஒப்பந்தத்தை இந்தியா இரத்து செய்யலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் தஸ்சால்ட் ஏவியேசன் நிறுவனத்திடம் இருந்து 20 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில், 126 ரபேல் போர் விமானங்கள் வாங்க இந்தியா விரும்பியது. 3 ஆண்டுகள் பேரம் பேசியும், விலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இதில் இறுதி முடிவு எடுக்கப்படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில்தான், பிரதமர் நரே நதிர மோடி 4 நாட்கள் அரசு முறை பயணமாக பிரான்ஸ் சென்றார். அவர் அந்த நாட்டின் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டேயை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது அவர், பிரான்சிடம் இருந்து இந்தியா நடுத்தரமானதும், பன்முக பயன்பாடு கொண்டதுமான 36 போர் விமானங்களை, பறக்கும் நிலையில் வாங்குவதாக உறுதி அளித்தார்.

இனி இந்தியா, பிரான்ஸ் அரசுகள் நேரடி பேச்சு நடத்தி 4 பில்லியன் டொலர் (சுமார் ரூ.24 ஆயிரத்து 800 கோடி) மதிப்பிலான 36 ரபேல் விமானங்கள் கொள்முதல் செய்யப்படும் என தகவல்கள் கூறுகின்றன.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் கூறுகையில், புதிதாக 36 ரபேல் ஜெட் போர் விமானங்கள் பிரான்சிடமிருந்து வாங்கப்பட இருப்பதால், 126 போர் விமானங்கள் வாங்குவதற்கு போடப்பட்ட ஒப்பந்தம் இரத்து செய்யப்படலாம், ரபேல் ஜெட் போர் விமானங்கள் வாங்குவது தொடர்பான எல்லா விடயங்களும் பிரான்ஸ் அரசாங்கத்துடன் நேரடியாக பேசி தீர்த்து கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

126 ரபேல் போர்விமானங்கள் வாங்குவதற்கு போடப்பட்ட, ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக கருத்து தெரிவிக்காத பாரிக்கர், "ஒரு கார் இரண்டு வீதியில் பயணம் செய்ய முடியாது" என்று தெரிவித்துள்ளார். எனவே ஒப்பந்தம் கோரப்பட்ட வீதி முடிவுக்கு வந்தது என்பதை இது குறிப்பிடுகிறது என கூறப்படுகிறது. (இ-5)

# ஜனாதிபதியாவார் ஹிலாரி கிளிண்டன்

## ஒபாமா நம்பிக்கை



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஹிலாரி கிளிண்டனுக்கு வாய்ப்பு உள்ளதாகவும், ஜனாதிபதியாகும் பட்சத்தில் அவர் சிறப்பாக செயற்படுவார் என்றும் ஜனாதிபதி ஒபாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் அடுத்தாண்டு நடைபெறவுள்ளது. தேர்தலை சந்திக்க குடியரசு, ஜனநாயக கட்சியினர் தயாராகி வருகின்றனர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இரு கட்சிகளை சேர்ந்த முக்கிய் பிரமுகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அமெரிக்காவை பொறுத்தவரை கட்சிக்குள் தேர்தல் நடத்தி, அதில் வெற்றி பெறுபவரே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார். ஜனநாயக கட்சியில் முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி ஹிலாரிக்கு அதிக செல்வாக்கு உள்ளது.

இந்நிலையில், அவரை ஜனாதிபதி வேட்பாளராக ஜனநாயக கட்சி முறைப்படி அறிவித்துள்ளது. அறிவிப்பு வெளியானது முதல் தீவிர பிரசாரத்தில் ஹிலாரி ஈடுபட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையை ஹிலாரி பெறவுள்ளார்.


67 வயதான ஹிலாரி, செனடராகவும், வெளியுறவுத்துறை அமைச்சராகவும் திறம்பட செயற்பட்டுள்ளார். கடந்தமுறை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தேர்வுக்கான போட்டியில் குறைந்த வாக்கில் தோல்வியை ஹிலாரி தழுவினார்.

இந்தமுறை அவர் வெற்றிபெறுவார் என தெரிகிறது. இந்நிலையில், ஹிலாரி அமெரிக்காவின் ஜனாதிபதியாவார் என்றும், சிறந்த ஜனாதிபதியாக விளங்குவார் எனவும் ஒபாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஹிலாரிக்கு எனது முழு ஆதரவு உண்டு. சிறந்த நிர்வாகியாக திறம்பட செயற்பட்டுள்ளார். அவர் என்னுடைய நண்பர். ஹிலாரி சிறந்த ஜனாதிபதியாக விளங்குவார்" என்றார்.

அமெரிக்காவில் ஒருவர் இரண்டு முறை தொடர்ந்து ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம். அதற்குமேல் தேர்தலில் நிற்கமுடியாது. 2 ஆவது முறையாக ஜனாதிபதியாக ஒபாமா பதவி வகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் முடிவடைவதையொட்டி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இங்கிலாந்து தேர்தல்களம்; டேவிட் கமரூன் பின்னடைவு




இங்கிலாந்தில் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் டேவிட் கமரூன் பிரதமராக பதவி வகித்து வருகிறார்.

அங்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் டேவிட் கமரூன் மீண்டும் போட்டியிடுகிறார். இந்த தேர்தலுக்கு முன் தனியார் நிறுவனம் சார்பில் அங்கு மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி முன்னிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

அதன்படி தொழிலாளர் கட்சிக்கு 36 சதவீத ஆதரவும், டேவிட் கமரூனின் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 33 சதவீத ஆதரவும் கிடைத்தன. அதேநேரம் ஐரோப்பிய கூட்டமைப்புக்கு எதிரான கொள்கையுடைய சுதந்திர கட்சிக்கு 13 சதவீத ஆதரவு காணப்பட்டது. மேலும் கன்சர்வேட்டிவ் கட்சியின் கூட்டணி கட்சியான லிபரல் ஜனநாயக கட்சிக்கு 7 சதவீத ஆதரவு கிடைத்தது. (இ-5)

# போகோஹறாம் அட்டூழியத்தால் 8 இலட்சம் குழந்தைகள் தவிப்பு



நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் நடத்தும் அட்டூழியத்தால் கடந்த 2007இலிருந்து சுமார் 8 இலட்சம் குழந்தைகள் வீடின்றி தவிப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் வெளியிட்டிருக்கும் அண்மைய அறிக்கையில், "வடகிழக்கு நைஜீரியாவில் சுமார் 8 இலட்சம் குழந்தைகள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். அவர்கள் வீடின்றி குடும்ப உறவுகளை இழந்து தவிக்கின்றனர். பல முறைகேடான செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறார்கள்.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கைவிடப்பட்ட அல்லது குடும்பத்தை இழந்து நிற்கும் குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. போகோஹறாம் நடத்தும் தாக்குதல்களின் விளைவாக இந்த அபாயம் நடந்துள்ளது.

இவர்களது சண்டைகளில் குழந்தைகள் திட்டமிட்ட இலக்குகள் ஆகின்றனர். பாலியல் தொந்தரவுகள், கட்டாயத் திருமணம், கடததல்கள் மற்றும் கொலைக்குள்ளாகின்றனர்.பல குழந்தைகள் கிளர்ச்சியாளர்களின் ஆயுதங்களாகிவிட்டனர். பயங்கர ஆயுதங்களை உபயோகிக்க பழக்கப்படுகின்றனர். சில நேரங்களில் மனித வெடிகுண்டுகளாக பயன்படுத்தப்படுகிறார்கள்.

கடந்த 2007இலிருந்து நைஜீரியாவில் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 8 இலட்சத்திலிருந்து 10.5 இலட்சமாக அபாயகரமான அளவில் அதிகரித்துள்ளது" என்று அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹறாம் தீவிரவாதிகள் அங்கு இதுவரை நூற்றுக் கணக்கானோரை படுகொலை செய்துள்ளனர். நைஜீரியாவின் நகரங்களை ஆக்கிரமிக்கும் இவர்கள் அங்கு "கலிபெத்" எனும் தனி இஸ்லாமிய நாடு அமைக்க இந்த தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கள்ளச்சாமியாருக்குக்
கழுத்திலே உருத் திராட்சம்
– தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சந்திரிகாவை பிரதமராக்குவதே மைத்திரியின் செய்ந்நன்றி

தென்பகுதியிலும் வடபுலத்திலும் அரங்கேறிவரும் அரசியல் குழப்பங்களைப் பார்க்கும் போது, கட்டாந் தரையில் நின்று 'ஓ' வென்று கதற வேண்டும் போல் உள்ளது. அந்தளவிற்கு அரசியல் திருகுதாளங்கள் மலிந்து போயுள்ளன.

தென்பகுதியில் மட்டுமன்றி வடபுலத்திலும் அரசியல் திருகுதாளங்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சாரார் பிரதமர் ரணிலோடு சேர்ந்து கொண்டு வடக்கின் முதல்வரை வஞ்சம் தீர்க்கின்றனர். இது தவிர கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எந்தப்பக்கம் நிற்கிறார்? என்ன செய்கிறார்? என்று புரியாமலே உள்ளது.

ஏதோ! சீவியம் போகிறது என்பதைத் தவிர, அரசியல் பக்கத்தால் எந்த நன்மையும் ஏற்பட்டதாக தெரியவில்லை. நிலைமை இதுவாக இருக்கையில், நூறு நாள் வேலைத்திட்டத்தின் வேகம் போதுமானதாக இல்லையென்றே சொல்ல வேண்டும்.

நூறுநாள் வேலைத்திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னதாக, பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை கவனிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்காக பாராளுமன்றத்தை கலைப்பதற்கு முன்னதாக நூறுநாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்றால், சீமான் மகிந்த மீண்டும் அரசியல் பிரவேசம் செய்வதான செய்திகள் ஜனாதிபதி மைத்திரிக்கு கடும் சுகவீனத்தைக் கொடுத்துள்ளது.

ஒரு பக்கம் பிரதமர் ரணிலின் அழுத்தம்; மறு பக்கம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியல் பிரவேசித்தல் என்ற தலையிடி என்றவாறு எல்லாமுமே குழப்பமாக உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருப்பதிக்குச் சென்றபோது, திருப்பதியானின் திருக்கதவுத்திறப்பு உடைந்த சம்பவத்தையும் நினைக்க அரசியலில் ஏதோ விபரீதம் நடக்கும் சாத்தியம் உள்ளது என்று மனம் ஏங்குகிறது.

எதுவாயினும் பாராளுமன்றம் கலைக்கப்படும் போது, ஜனாதிபதி மைத்திரி ஒரு தத்திலிருந்து தப்பிக் கொள்கிறார் என்று பொருள் கொள்ளலாம்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் பிரவேசிக்கின்ற நிலைமை ஏற்படுவதை தடுப்பதும் மைத்திரியின் தலையாய பணியாக இருக்கும்.

இந்தப் பணியில் மைத்திரிக்கு இருக்கக் கூடிய முக்கியமான உதவுகரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவாகவே இருப்பார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தும் போது, மகிந்தவின் அரசியல் பிரவேசம் தடுக்கப்படும்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரி கூறுவது போல ஒரு வேட்பாளராக போட்டியிடுவதற்கு மகிந்தவிற்கு தடையில்லை என்பதை மகிந்த ஏற்றுக்கொள்வாரா என்றால் இல்லை என்பதே பதிலாகவே இருக்கும்.

இந்த நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு ஒரு போதும் உடன்படமாட்டார். அவரைப் பொறுத்தவரை ஆகக் குறைந்தது பிரதமர் பதவியாவது தனக்குத்தரப்படவேண்டும் என்பதாகும்.

ஆனால், தன்னை ஜனாதிபதியாக்கிய சந்திரிகாவை பிரதமராக்குவதே அவருக்குத் தான் செய்யும் செய்ந்நன்றி என்பது ஜனாதிபதி மைத்திரியின் நிலைப்பாடு.

அதேநேரம் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்தைத் தடுக்க – ரணில் விக்கிரமசிங்கவை ஓரம் கட்ட – மகிந்தவுக்கு ஆதரவாக இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை மடக்க சந்திரிகாவை பிரதமராக்குவதே மைத்திரிக்கு இருக்கக் கூடிய ஒரே வழி என்பதால்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சந்திரிகா பிரதமர் வேட்பாளராகும் வாய்ப்பு நிறையவே உண்டெனலாம்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதி மோசடிகள் குறித்து விசாரணை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடிகளை அம்பலப்படுத்தும் வகையில் அண்மையில் வெளியிடப்பட்ட வெலியமுன அறிக்கைபற்றி சட்டமா அதிபரிடம் கருத்து பெறப்படவுள்ளது.

வானூர்தி சேவைகள் பிரதிய மைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கனின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க ஊழல் மோசடிகள் பலவற்றில் தொடர்புகொண்டிருந்ததாக வெலிய முன அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அவரின் நிர்வாக காலப்பகுதியில் வானூர்தி நிறுவனம் மில்லியன் கணக்கில் நட்டத்தை எதிர்கொண்டிருந்தது.

குறிப்பாக வானூர்தி சேவைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னாள் தலைவர் தன்னிச்சையாக செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இளம் வானூர்தி பணியாளர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பாக அவர் கூடிய கவனம் செலுத்தியதாகவும், புதிய வானூர்திகளை கொள்வனவு செய்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 15 லட்சம் ரூபாய் வேதனத்துடன் நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கன் வானூர்தி சேவையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

# இனப்பிரச்சினைக்கு புதுவருடத்தில் தீர்வு காணப்பட வேண்டும் - செல்வராசா

(கொழும்பு)

கடந்த கால கஷ்டங்கள் நீங்கி எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்கள் சகல உரிமைகளும் பெற்று சிறப்புற்றுவாழ இந்த சித்திரைப் புத்தாண்டு வழி சமைக்கும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,

65 ஆண்டு காலமாக தமிழரின் அபிலாசைகள் தீர்க்கப்படவில்லை என்ற காரணத்தினால் தமிழர்கள் சித்திரைப் புத்தாண்டை மன சந்தோசத்துடனும் சமாதானத்துடனும் காலாகாலமாக கொண்டாடுவதில் சங்கடங்களை எதிர்நோக்கி இருந்தார்கள்.

ஆனால் 2015-ம் ஆண்டு மன்மத வருட புத்தாண்டு களைகட்டியுள்ளதை காணமுடிகிறது.

வருகின்ற காலத்தில் தமிழர் கள் தங்களது அபிலாசைகளை வென்றெடுக்கின்ற புத்தாண்டாக இது மாற வேண்டும்.

அத்துடன் 65 வருடங்களாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு இந்த புதுவருடத்தில் ஒரு தீர்க்கமான முடிவுகாணப்பட வேண்டுமெனக் கூறிக் கொள்கிறேன் என்றார். (செ-11)

# இலங்கை மீன் ஏற்றுமதி தடை விரைவில் நீங்கும் என எதிர்பார்ப்பு

## கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையின் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை விரைவில் நீக்கப்படும் என கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த தடையை நீக்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள வி.எம்.எஸ். உபகரணங்களை எதிர்வரும் மே மாதத்திற்குள் படகுகளில் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சும், ஜனாதிபதியும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த உபகரணங்களை படகுகளில் பொருத்துவதற்கு அமைச்சினால் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வீதம் படகு உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை கொடியுடன் சீன மீன்பிடி படகுகள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் ஏற்கெனவே நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும் இலங்கை மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விரைவில் நீக்கப்படும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (செ-11)

# மின்னல் தாக்கி இளைஞன் பலி

(கொழும்பு)

மொனராகலை, சிரிகல பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை பெய்த மழையுடன் மின்னல் தாக்கியதில் பிரஸ்தாப இளைஞன் உயிரிழந்து ள்ளார்.

மின்னல் தாக்கியதில் உயிரிழந்த இளைஞனின் வீடும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞனின் சடலம் சிரிகல வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதினால் பொது மக்கள் பெரிதும் அவதானமாக இருக்க வேண்டும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (செ-11)

# கைதிகளை பார்வையிட நேற்று விசேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் உட்பட நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் நேற்று கைதிகளைப் பார்வையிடுவதற்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வழமையாக சிறையிலுள்ள ஒருவரைப் பார்வையிட ஒரு நாளைக்கு ஒரு தடவை 3 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும். விளக்கமறியல் கைதிகளை ஒவ்வொரு நாளும் சென்று பார்வையிட முடியும். சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை மாதத்தில் ஒரு தடவையே பார்வை யிட முடியும்.

ஆனால் புதுவருடதினமான நேற்று சிறைச்சாலையில் உள்ளவர்களைப் பார்வையிட 3 பேர் என்ற வரையறை நீக்கப்பட்டிருந்தது என்று சிறைச்சாலைத் தரப்பு தெரிவித்தது.

இதன்படி வழமைபோன்று முற்பகல் 9.00 மணி தொடக்கம் மதியம் 12.30 வரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் கைதிகளைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவலகத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக் கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்துவிட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்து போய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயன் பெல் அபார சதம்



# இங்கிலாந்து சிறந்த ஆரம்பம்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து 5 விக்கெட் இழப்பிற்கு 341 ஓட்டங்களை எடுத்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையே முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆண்டி குவாவில் தொடங்கியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனையடுத்து இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

இங்கிலாந்து அணித்தலைவர் அலைஸ்டர் குக், டிராட் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

டிராட் 3 பந்துகள் சந்தித்த நிலையில் டக் அவுட் ஆனார். இவர் கடந்த ஆசஷ் தொடரில் இருந்து விலகி சுமார் ஒரு வருடத்திற்கு பிறகு அணிக்கு திரும்பினார். அணிக்கு திரும்பிய முதல் போட்டியிலேயே டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

இதைத் தொடர்ந்து வந்த பலன்ஸ் 10 ஓட்டங்களிலும், குக் 11 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து அவுட் ஆனார்கள்.

இதனால் இங்கிலாந்து அணி 34 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டை இழந்து தத்தளித்தது.

இதனையடுத்து 4 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பெல்- ரூட் ஜோடி இங்கிலாந்து அணிக்கு சிறந்த நிலையை உருவாக்கியது.

ரூட் 83 ஓட்டங்களும், பெல் 143 ஓட்டங்களும் எடுத்து அவுட் ஆனார்கள். இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்கு 177 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து வந்த வேகப்பந்து வீச்சாளர் ஸ்டோக் 71 ஓட்டங்கள் எடுத்தும், மறுமுனையில் டிரெட்வெல் பந்தை ஏதும் சந்திக்காமலும் களத்தில் உள்ளார்.

இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 341 ஓட்டங்கள் குவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள் தரப்பில், டெய்லர், ரோச் தலா 2, ஹோல்டர் 1 விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர். (க)



சுப்பர் கிங்ஸ் அணிக்காக

## தெருவில் தள்ளு வண்டியில் மாம்பழம் வாங்கிய பிராவோ



ஐபிஎல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வரும் வெய்ன் பிராவோ மாம்பழம் வாங்க சென்றதை ரசிகர்கள் வியப்புடன் வேடிக்கை பார்த்தனர்.

மேற்கிந்திய தீவுகளின் சகலதுறை ஆட்டக்காரர் வெய்ன் பிராவோ ஐபிஎல் போட்டிகளில் சென்னை அணியில் பட்டையை கிளப்பி வருகிறார். இவருடைய டான்ஸ்க்கு ரசிகர்கள் அடிமை.

இந்நிலையில் ஐபிஎல் போட்டிக்காக சென்னை வரும் பிராவோ, ஒரு தெருவில் தள்ளு வண்டியில் அணி வீரர்களுக்காக மாம்பழம் வாங்கிக் கொண்டிருந்தார்.

இதனை ரசிகர்கள் வியப்புடன் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்.

இதே போல சென்னை அணியின் சகவீரர் சுரேஷ் ரெய்னா, தமிழ்நாட்டில் உள்ள கோவில்களுக்கு விசிட் அடித்துக் கொண்டிருக்கிறார். (க)

## மோசமான பந்துவீச்சுதான் தோல்விக்கு வழிவகுத்தது

கப்டன் விராட் கோலி



8 ஆவது ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணியை வீழ்த்தி ஐதராபாத் முதல் வெற்றியை பெற்றது. முதலில் விளையாடிய றோயல் சலஞ் சர்ஸ் பெங்களூர் அணி 19.5 ஓவர்களில் 166 ஓட்டங் களில் 'ஓல்அவுட்' ஆனது.

பின்னர் ஆடிய சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி கப்டன் வோர்னரின் அதிரடியால் எளிதில் வெற்றி பெற்றது. ஐதராபாத் அணி 17.2 ஓவரில் 172 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெற்றி குறித்து ஐதராபாத் அணி கப்டன் வோர்னர் கூறும்போது, போல்ட், புவனேஸ்வர்குமாரின் வேகப்பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. களத்தடுப்பும் சிறப்பாக அமைந்தது. தவானின் பட்டிங் நேர்த்தியாக இருந்தது. வெற்றிக்கு பவுலர்கள் காரணம் என்றார். தோல்விகுறித்து பெங்களூர் அணி கப்டன் விராட் கோலி கூறியதாவது.

எங்களது பந்துவீச்சு மோசமாக இருந்தது. பந்து வீச்சில் இன்னும் முன்னேற்றம் தேவை. அடுத்த போட்டிக்கு வேகப்பந்து வீரர் மிலின் உடல் தகுதி பெறுவார். ஸ்டார்க் விரைவில் அணிக்கு திரும்புவதன் மூலம் கூடுதல் பலம் பெறுவோம். எங்களது பட்டிங்கில் 20 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம். இந்த ஆடுகளத்துக்கு 180 முதல் 185 ஓட்டங்கள் வரை எடுத்து இருக்க வேண்டும். அடுத்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஐதராபாத் அணி 3 ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸை 16 ஆம் திகதி விசாகப்பட்டி னத்தில் [illegible] ரோயல்ஸை 19 ஆம் திகதி எதிர் கொள்கிறது. (க)

## பஞ்சாப் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும்;ப்ரீத்தி ஜிந்தா



ஐபிஎல் 8 ஆவது தொடரில் பஞ்சாப் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தும் என்று அந்த அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ப்ரீத்தி ஜிந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த ஐபிஎல் சீசனில் பட்டையை கிளப்பிய பஞ்சாப் அணி, இந்த தொடரில் 2 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் 2 புள்ளிகள் பெற்றுள்ளது.

இந்நிலையில் பஞ்சாப் அணியின் செயற்பாடு குறித்து ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த ப்ரீத்தி ஜிந்தா, பெய்லி, மக்ஸ்வெல், மிட்செல் ஜோன்சன், ஷான் மார்ஷ் போன்ற அவுஸ்திரேலிய வீரர்கள் எங்கள் அணியில் இருப்பது மிகப் பெரிய சொத்தாகும்.

ஆனால் இந்திய வீரர்கள் தான் அணிக்கு பலம்.

ஷேவாக் அணியில் இருப்பது மிகப்பெரிய பலமாகும். கடந்த ஆண்டு அவர் சென்னை அணிக்கு எதிராக அதிரடியாக விளையாடியதை யாராலும் மறக்க இயலாது. கடந்த காலங்களில் ஐபிஎல் போட்டியில் நான பார்த்த சிறந்த ஆட்டம் இது வாகும்.

மேலும் பஞ்சாப் அணியை விற்கப்போவதாக கூறப்படுவது வதந்தியே. எங்கள் அணிக்கு அதிகமான இலாபம் வருகிறது.

வீரர்கள் தொடர்ந்து சிறப்பாக ஆடுவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையை வென்றது ராஜஸ்தான் வீணானது பொலார்ட்டின் அதிரடி



ஸரீபன் ஸ்மித்தின் அதிரடியால் மும்பைக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

8ஆவது ஐ.பி.எல். போட்டியின் 8ஆவது லீக் ஆட்டம் அஹமதாபாத்தில் நேற்றிரவு 8 மணிக்கு நடைபெற்றது.

இதில் மும்பை இந்தியன்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் அஹமதாபாத்தில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய மும்பை அணியில் மூன்று மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

கடந்த ஆட்டத்தில் அந்த அணியை வெற்றிக்கு அருகில் அழைத்து சென்ற ஹர்பஜன் சிங் விளையாட முடியாமல் போனதால் அவருக்கு பதிலாக லெக் ஸ்பின்னர் ஸ்ரேயாஸ் கோபால் அணியில் இடம்பிடித்தார். அத்துடன் பார்த்திவ் படேல் மற்றும் உன்முகத் சந்த் ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டனர்.

தொடக்க வீரர்களாக ஆரோன் பின்ச் மற்றும் பார்த்திவ் படேல் களமிறங்கினார்கள். அதிரடியாக விளையாடிய் பின்ச் 10 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தொடை பகுதியில் ஏற்பட்ட காயத்தால் தொடர்ந்து விளையாட முடியாமல் வெளியேறினார். பார்த்தீவ் படேல் 16 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் குல்கர்னி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய உன்முகத்சந்த் 16 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார். இப்போட்டியில் நடுகள வீரராக களமிறங்கிய அணித் தலைவர் ரோகித் சர்மா டக் அவுட்டாகி அனைவரையும் ஏமாற்றினார்.

இதனால் முதல் 10 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையில் மும்பை அணி இருந்த போது, ஜோடி சேர்ந்த பொலார்ட் - அண்டர்சன் இருவரும் அணியின் நிலைமையை உணர்ந்து முதலில் மெதுவாக ஆடி ஓட்டங்களை எடுத்தனர்.

பின்னர் பொலார்ட் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தை தொடங்கினார். மறுமுனையில் இருந்த அண்டர்சனும் தனது பங்குக்கு பவுண்டரிகளை விரட்டியபடி இருந்தார்.

இந்த ஜோடி 9 ஓவர்களில் 104 ஓட்டங்களை குவித்து அசத்தியது. பொலார்ட் 34 பந்துகளில் 70 ஓட்டங்கள் எடுத்து 19ஆவது ஓவரின் கடைசி பந்தில் ஆட்டமிழந்தார். அண்டர்சனும் 38 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து கடைசி ஓவரில் போல்ட் ஆனார்.

20 ஓவர்களில் நிறைவில் மும்பை அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் சார்பில் ரிம் சௌதி, மோரிஸ், குல்கர்னி, பின்னி, தம்பே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.






இதனையடுத்து 165 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 7 விக்கெட்டுக்கள் வித் தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும், ரஹானே 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் வினய்குமார், மலிங்க, கோபால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் தலைவர் ஸ்மித் தெரிவானார். (க)




## உத்தப்பா - சர்பிராஸ்கான் மோதல் புகார் வரவில்லை:

### —ஸ்ரீநாத்



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதிய ஆட்டம் கடந்த 11ஆந் திகதி கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்தது.

இந்தப்போட்டியின் போது கொல்கத்தா வீரர் உத்தப்பா பெங்களூரு அணியின் புதுமுக வீரர் சர்பிராஸ்கான் சட்டையை பிடித்து இழுத்ததாகவும், இது தொடர்பாக இருவருக்கும் மோதல் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த சம்பவத்துக்காக உத்தப்பா மன்னிப்பும் கேட்டதாகவும் தகவல் வெளியாகி இருந்தது.

இதுகுறித்து அந்த போட்டியின் நடுவர் ஸ்ரீநாத்திடம் கேட்டபோது, வீரர்களுக்குள் மோதல் ஏற்பட்டது பற்றி எந்த புகாரும் வரவில்லை. [illegible] எங்களுக்கு [illegible] என்றார். (க)

## பந்துவீச்சு பயிற்சியாளர் அலன் டொனால்ட் விலகல்



தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட்.

இவர் கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக பணிபுரிந்து வந்தார்.

அவர் நேற்றுடன் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்த தகவலை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து டொனால்ட் கூறும்போது,

"உலகக் கிண்ணத்துக்கு பிறகு பலமுறை பதவி விலக நினைத்தேன். ஆனால், தற்போதுதான் அதற்கான சரியான நேரம் என்று முடிவு எடுத்தேன்.

என்னுடைய ஓய்வுக்குப்பின் தென்னாபிரிக்கா அணிக்காக உழைக்க வேண்டும் என்று நினைத்தேன். அதை நிறைவேற்றும் வகையில் எனக்கு பந்துவீச்சு பயிற்சியாளர் பதவியை கொடுத்து மிகப்பெரிய கௌரவத்தை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை செய்தது.

2015 உலகக் கிண்ண அரையிறுதிக்கு தென்னாபிரிக்கா முன்னேறியது, எனது பயிற்சியாளர் பதவியின் நான்கு வருடம் எனது வாழ்க்கையின் மிகச் சிறந்ததாகும்" என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா பயணிக்க...

யிருந்தது.

அதனடிப்படையில் இலங்கை 44 ஆவது நாடாக அந்தப் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தியாவின் புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம், கொச்சின் மற்றும் கோவா ஆகிய விமான நிலையங்களில் வைத்து இலங்கையர்கள் 30 நாட்களுக்கு விசா பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த சந்தர்ப்பத்தை இலங்கையர்களுக்கு வழங்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதிமொழிக்கு அமைவாகவே இந்த திட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிய டாக்டர் அம்பேத்கரின் ஜனன தினத்தை முன்னிட்டு இச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. (செ-11)

## தங்கம் கடத்திய...

டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

35 வயதான இந்திய பிரஜைகள் இருவரே மூன்று பொதிகளில் தங்க ஆபரணங்களை கடத்திச்செல்ல முற்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று மாலை 3.35 மணிக்கு கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மதுரை நோக்கிப் புறப்படவிருந்த விமானத்தில் தங்கத்தை கடத்திச்செல்ல முற்பட்டுள்ளதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைதான இந்திய பிரஜைகளிடம் சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மூன்று கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய 34 தங்க பிஸ்கட்களை சென்னைக்கு கடத்திச்செல்ல முற்பட்ட இந்திய பிரஜை ஒருவரும் நேற்று அதிகாலை விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (செ-11)

## ரணில்-மைத்திரி...

நடத்தும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக கூறப்படுகின்றது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் ஆகிய இரண்டையும் ஒரேவேளையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தி வருகின்றது.

இத்தகையதொரு சிக்கலான நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பிலேயே இவ்விருவருக்கும் இடையில் எதிர்வரும் 17ஆம் திகதி இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## சர்வதேச...

நட்பை தொழிற்கட்சி தொடர்ந்து பேணி வரும் எனவும் குறிப்பிட்ட அவர், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையானதும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்வதற்கு பிரித்தானிய தொழிற்கட்சி தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது தான் வலியுறுத்தியதாகவும், இவ்விவகாரத்தில் தொழிற்கட்சி தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் எனவும் இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களுக்கான தொழிற்கட்சியின் கடமைப்பாடு என்ன என்பதை தாங்கள் அறிவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இறுதியாக தமிழ் மக்களுக்கு புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்த எட் மிலிபான்ட், எதிர்காலத்திலும் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலாக இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஐ.நா விசாரணைக்கு...

னைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனிலும், இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் இன்று (நேற்று) புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மில்லியன் கணக்கான மக்கள் இன்று (நேற்று) தமது குடும்பத்தினர், நண்பர்கள், அயலவர்களுடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். பிரித்தானியாவில் தமிழ், சிங்கள சமூகங்களின் அற்புதமான பங்களிப்புகளையும் இந்த தருணத்தில் நினைவு கூர வேண்டும். பலர், வெளிநாடுகளில் உள்ள தமது அன்புக்குரியவர்களை நினைத்து, குறிப்பாக இலங்கையில் உள்ளவர்களை நினைத்து புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர்.

கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை டவுணிங் வீதி இல்லத்தில் சந்தித்த போது, கடந்த கால விவகாரங்களுக்குத் தீர்வு காண அவரது அரசாங்கம் எடுக்கின்ற முயற்சிகளுக்கு எனது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளேன்.

ஆனால், இலங்கை அரசாங்கம் ஐ.நா விசாரணைகளுக்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்றும், இன்னும் மேலே செல்ல வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தேன். இந்த புத்தாண்டு கடந்தகால காயங்களை குணப்படுத்துவதற்கு உதவுவதுடன், சமூகங்களுக்கு இடையில் நெருக்கத்தையும் கொண்டு வரும் என்று நம்புகிறேன். புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும், மிகவும் மகிழ்ச்சியான, வளம்மிக்க ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன் என்று பிரிட்டன் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## வலிகாமத்திலுள்ள...

க்கை சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியினால் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பரிசோதிக்கப்பட்ட 30 கிணறுகளிலுமே எண்ணெய் கலந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 3 கிணறுகளில் அதிக செறிவில் காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு இக் கிணறுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


அண்மைக்காலமாகவே உள்ளூர் அதிகாரிகளால் நடத்தபட்ட சில ஆய்வுகளில் எண்ணெய் தொடர்பான நச்சுப் பதார்த்தங்கள் இல்லை என அறிவிக்கப்பட்டதும் இதனை அடுத்து மக்கள் தங்கள் கிணற்று நீரினைப் பாவிக்கலாம் என அறிவிக்கப்பட்டதும் அறிந்ததே. இதனை விடவும் 2014ஆம் ஆண்டு நீர்வழங்கல் அதிகார சபையினரால் பாரிய அளவில் முறையாகச் செய்யப்பட்ட ஆய்வில் 75 வீதமான கிண றுகளில் அதிகள வில் எண்ணெய் இருப்பது உறுதி செய்யப்பட்டது குறிப் பிடத்தக்கது. (செ-11)

## 605...

பட்டுள்ளனர்.

மேலும் முச்சக்கரவண்டி சாரதிகள், லொறி, பஸ் சாரதிகளும் நூற்றுக் கணக்கில் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது (செ-11)

# கண்களை பாதுகாக்க டிப்ஸ்



பெண்களுக்கு கண்ணழகே தனி அழகு தான். இந்த அழகைப் பெற இரு கைகளையும் கண்களின்மீது மூடி சிறிதுகூட வெளிச்சம் தெரியாமல் இருட்டாக இருக்கும்படி செய்து, அந்த இருட்டிலேயே கண்களை மட்டும் மேலும் கீழும், பக்கவாட்டிலும் பயிற்சியளிப்பதன் மூலம் கண்களின் சோர்வு நீங்குவதோடு அழகும் பெறும்.

கண்கள் பிரகாசமாக இருக்க, நந்தியாவட்டை பூவைப் பறித்து வந்து சுத்தம் பார்த்து, வெள்ளைத் துணியில் சுற்றி கண்களில் மேல் வைத்துக் கட்டி வந்தால் போதும். மேலும் ஒரு வழியில் செய்யலாம். பறித்து வந்த பூவை தண்ணீரில் நன்கு கழுவி, கண்களின் மேல் ஒற்றியெடுக்க கண்கள் குளிர்ச்சி பெறுவதோடு அழகும் கூடும்.

படபடப்பாக இருந்தால், கண்கள் பொலிவிழந்து போகும். அப்படி படபடப்பாக உணரும் போது, வசதியாக அமர்ந்து இரு கண்களையும் மூடிக்கொண்டு, இடக்கண் இமை மீது இடக்கை விரலையும், வலக்கண் இமைமீது வலக்கை விரலையும் வைத்து, மென்மையாக நீவி விடுங்கள். ஓரிரு நிமிடங்கள் நீவிய பிறகு, கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். உடனடியாக முகப் பொலிவு தெரியும்.

கண்கள் அழகாகவும் குளிர்ச்சியாகவும் இருக்க வேண்டுமானால், கீரை, சிறுகீரையை மதிய உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொன்னாங்காணிக் கீரையை புளி சேர்க்காமல் சமைத்தும் சாப்பிடலாம். முழு நிலவன்று இரவு நிலவைப் பார்ப்பது நல்லது.

வாய் நிறையத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு, கண்களை நன்கு திறந்து சுத்தமான தண்ணீரை கண்களில் தெளித்துக் கொண்டாலும், கண்கள் அழகாகும்.

உருளைக்கிழங்கு ஒன்றை சரி பாதியாக வெட்டி, வெட்டப்பட்ட பகுதியை கண்களைச் சுற்றியும், கைகள், கழுத்து ஆகிய பகுதிகளிலும் மெதுவாகத் தேயுங்கள். உங்களுடைய கண்கள் மீதும், உள்ளங்கால்களின் மீதும்கூட அதைத் தேய்க்கலாம். இப்படி செய்தால், கண் கருவளையங்களும், தோலின் மீதுள்ள பருக்களும் மறையும்.

கருவளையமும், கண் சோர்வும் அகல சந்தனக் கல்லில் ஜாதிக்காயை அரைத்து இரவில் படுக்கும் முன் கண்களைச் சுற்றித் தடவிக்கொண்டு படுங்கள். காலையில் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். இவ்வாறு பத்து நாள்கள் செய்து வந்தாலே போதும் உங்கள் கண்கள் நட்சத்திரம் போல மின்னத் தொடங்கும்.

# குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு



ஆனமடு, கோன்வலகந்த குருபொகுணகம பிரதேசத்தில் துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 40 வயதுடைய நபர் ஆனமடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியுடன் புத்தாண்டுக்காக பலகாரம் சமைத்துக் கொண்டிருக்கையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து காயமடைந்தவரின் மனைவி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கையில்,

தனது கணவருடன் யாரும் தனிப்பட்ட ரீதியில் குரோதம் கொண்டிருக்கவில்லை. குறித்த துப்பாக்கிப் பிரயோகம் காட்டு விலங்குகளை இலக்கு வைத்து வைக்கப்பட்டதாக இருக்கலாம் எனவும் விசாரணைகளின் போது அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆன மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


**கடமை நிறைவேற்று அதிபர்களின் கலந்துரையாடல்**

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடமை நிறைவேற்று அதிபர்களின் அவசர கலந்துரையாடல்

காலம்:-16.04.2015 (வியாழக்கிழமை)

நேரம்:- மு.ப 10.00 மணி

இடம்:-ஏசியன் கல்வி நிலையம், மீசாலை.

வட மாகாணத்தில் கடமையாற்றும் சகல கடமை நிறைவேற்று அதிபர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏற்பாட்டுக் குழு

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af

வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.

உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.

INTERNATIONAL DIPLOMAS.

ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

af

**FRENCH MOVIES – JAFFNA**

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

TALES & LEGENDS

7 short movies from Africa

(1966-1993, 67 min.)

on Thursday 16 April 2015 at 4:00 p.m.

at Alliance Française de Jaffna,

61, Kachcheri-Nallur Road, Jaffna.

Phone : 0212228093

French language. English subtitles. Free entrance.

(081)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.